பக்கங்கள்: 16 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 12 சனிக்கிழமை 26.06.2021 கதிர் 233

### இனி இது ரகசியம் அல்ல!

வருகின்றார் பஸில் பராக்! பராக்! பராக்!

நாடாளுமன்றத்துக்கு வரவிருக்கும் பஸில் ராஜபக்ஷவுக்கு இப்படிக் கட்டியம் கூற ஆளும் தரப்பில் பலர் குஷியாகக் காத்திருக்கின்றார்கள்.

ஆனால் அவர்

பக்கம்02

# தவறுகளைத் திருத்திக்கொண்டு முன்னோக்கிப் பயணிப்போம்; உள்ளக விவகாரங்களில் வெளியாள்கள் தலையிடவே முடியாது!

## ஜனாதிபதி கோட்டாபய நேற்றிரவு விசேட உரை



தவறுகளைத் திருத்திக்கொண்டுமுன்னோக்கிப்பயணிப்போம்என்றுஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு நேற்றிரவு ஆற்றிய விசேட உரையிலேயேஅவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை மக்கள் அன்று மத ரீதியிலான அடிப்படைவாத அச்சத்தில் உறைந்திருந்தனர். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்குப் பின்னர் இலங்கையின் பாதுகாப்புக் கட்டமைப்பு வீழ்ச்சி கண்டதை மக்கள் அவதானித்தார்கள். கடந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட பிழையான தீர்மானங்கள்

2

## ஓரணியில் நின்று தீர்வுக்காகச் செயற்பட

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைமைகளுக்கு அழைப்பு

## நாளை 'சூம்' மூலம் கலந்துரையாடல்



ஒருமித்த நிலைப்பாட்டில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை முன்னெடுப்பதற்கான கலந்துரையாடலுக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைமைகளுக்கு தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

2

# 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் செப்டெம்பர் மாதத்துக்குள் தடுப்பூசிகள்

## விசேட உரையில் ஜனாதிபதி உறுதி

இவ்வருடம் செப்டம்பர் மாதமளவில், ஒரு கோடி 30 இலட்சம் பேருக்குக் கொரோனாத் தடுப்பூசிகளை வழங்க முடியும் என எதிர்ப்பார்க்கின்றோம். இதன்படி 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இக்காலப்பகுதியில் தடுப்பூசிகளை வழங்கக் கூடியதாக இருக்கும்.

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு நேற்றிரவு ஆற்றிய விசேட உரையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டின் மொத்தச் சனத்தொகையில், சுமார் 30 இலட்சம் பேருக்குத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. ஜூலை மாதத்தில் 40 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகளும், 25 இலட்சம் சைனோவெக்

2

# இலங்கையில் மேலும் 48 பேர் கொரோனாவால் உயிரிழப்பு

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 48 உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 26 ஆண்களும், 22 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 862 ஆக அதிகரித்துள்ளது.

# யாழ்ப்பாணத்தில் 45 பேர் உட்பட வடக்கில் 53 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 53 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 45 பேருக்கும், கிளிநொச்சி

2

# விஸ்தரிக்கும் ராஜபக்ஷ குடும்ப ஆட்சி; ஜூலை 6இல் எம்.பியாகின்றார் பஸில்

## அமைச்சுப் பதவியும் காத்திருப்பு



அமெரிக்காவில் இருந்து நேற்று நாடு திரும்பியுள்ள முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, விரைவில் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கவுள்ளார் என்று அரசியல் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எப்போது அவர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்பது என்பது குறித்து ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்குள் தற்போது

2

# 1,859 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ்

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,859 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

பல வாரங்களின் பின்னர் நாளாந்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை கடந்த இரு நாள்களாக இரண்டாயிரத்தை விடவும் குறைவாகப் பதிவாகியுள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின்

2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரும் போது சட்ட சிக்கலையும் கூட்டிக் கொண்டு வருகின்றார் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அவர் பெயர் தேர்தல் ஆணையத்தினால் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டதுமே அதற்கு எதிராக நீதிமன்றத்துக்குச் செல்வதற்கு எதிரணி இப்போதே தயாராகி விட்டது என்று தகவல்.

கடந்த பொதுத் தேர்தலில், எந்தக் கட்சியின் வேட்பாளர் பட்டியலிலும் பஸிலின் பெயர் இருக்கவில்லை. தேர்தலில் போட்டியிடும் தகுதி கூட அப்போதைய சட்டப்படி பஸிலுக்கு இல்லை. இப்போது மொட்டுக் கட்சி கொண்டு வந்த இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தின் பிரகாரம் அந்தத் தகுதி அவருக்கு வந்துள்ளது.

மொட்டுக் கட்சியின் தேசியப் பட்டியல் வேட்பாளர் அணியில் பஸில் ராஜபக்ஷவின் பெயர் இல்லாத காரணத்தினால் அவர் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குள் நுழைவதில் சிக்கல் உண்டு என்பதையும் –

அந்தப் பிரச்சினையை சட்டத்தில் உள்ள ஓர் ஓட்டையைப் பயன்படுத்தி பஸில் தாண்ட முடியும் என்பதையும் –

சட்ட வாதங்களின் அடிப்படையில் இப்பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் – அடுத்தடுத்து இரண்டு தினங்கள் – விரிவாக விளக்கியிருந்தேன். வாசர்களுக்கு நினைவில் இருக்கும் என நினைக்கிறேன்.

ஆனால், அந்தச் சட்டப் பிரச்சினைகளை எல்லாம் கவனத்தில் எடுக்காமல் கண்மூடித்தனமாக நடப்பதற்கு மொட்டுக் கட்சி தீர்மானித்திருப்பதாக மிக மிக நம்பகரமாக அறிய வருகின்றது.

தேசியப் பட்டியல் வேட்பாளர் அணியிலோ அல்லது மாவட்ட வேட்பாளர் அணியிலோ போட்டியிட்ட ஒருவரைத்தான் தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்க முடியும் என்ற சட்ட ஏற்பாடு, ஆகப் பொதுத் தேர்தல் நடந்து முடிந்த கையோடு இடம்பெறும் நியமனங்களுக்குத்தான் பொருந்தும் என்றும் –

அதற்குப் பின்னால் தேசியப் பட்டியல் எம்.பி. ஒருவர் இராஜினாமாச் செய்வதால் ஏற்படும் வெற்றிடத்துக்கு ஒருவரை நியமிக்கும் போதும் அந்த சட்ட விதி பொருந்தும் என்று சட்டத்தில் தெளிவான ஏற்பாடு இல்லை என்றும் –

மொட்டுக் கட்சித் தலைமைக்கு சில சட்டப் பிரகிருதிகள் ஆலோசனை கூறியிருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

அதை ஒரு விடயமாகப் பிடித்துக் கொண்டுள்ள பஸில் தரப்பு, அப்படி ஏதும் பிரச்சினை வந்தால் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்ற துணிச்சலில் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இப்போது பஸிலின் பெயர் மொட்டுக் கட்சித் தேசியப் பட்டியல் எம்.பி. நியமனத்துக்காகத் தேர்தல் ஆணையத்துக்குப் போகும் போது, அதைத் தேர்தல் ஆணையம் நிராகரிக்காது என்பது மொட்டுக் கட்சியின் நம்பிக்கை.

சுயாதீன தேர்தல் ஆணையம் 2020 நவம்பருடன் செயலிழந்து விட்டது. அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தின் கீழ் ஜனாதிபதி தம்மிஷ்டப்படி நியமித்த 'றப்பர் ஸ்டாம்ப்' தேர்தல் ஆணையமே இப்போதுள்ளது. அந்தத் தேர்தல் ஆணையத்தில் பஸிலின் பெயர் சட்டப்பரிசீலனைக்கு உள்ளாகித் தடுக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அடியோடு இல்லை என்று கூறப்படுகின்றது.

ஆனாலும், பஸிலின் பெயர் தேர்தல் ஆணையத்தினால் ஏற்கப்பட்டு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டதும் உடனேயே உரிய நீதிமன்றுக்குப் போகத் தேவையான தயாரிப்புகளை – சட்ட ஆலோசனைகளை – பிரதான எதிரணித் தரப்பில் முக்கிய வட்டாரங்கள் மேற்கொண்டிருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

பஸில் எம்.பி. பதவியை ஏற்று அமைச்சரானாலும் கூட, அவர் எம்.பி. பதவியை ஏற்கும் முறைமை அவரை அப்பதவியில் தொடர அனுமதிக்காது என்றே தோன்றுகின்றது.

சட்டக் கட்டுப்பாடுகளை தம்மிஷ்டப்படி மாற்றியமைக்கும் முயற்சியில் ஒரு தடவை ஏறி விழுந்த பின்னர்தான் பாடம் படித்துத் திருந்துவார் பஸில் என்றே எனக்குப் படுகின்றது.

பார்ப்போம் அவர் முயற்சி என்னாகப் போகின்றது என்பதை...!

★ ★ ★

தமிழ்த்தேசியக்கட்சிகளைஒன்றிணைக்கும் ரெலோவின் எத்தனத்துக்குக் கூட்டமைப்புப் பங்காளிக் கட்சிப் பிரமுகர் ஒருவரினால் ஆப்பு வைக்கப்பட எடுத்து முயற்சி குறித்து சில தினங்களுக்கு முன் என் பத்தியில் விலாவாரியாக குறிப்பிட்டிருந்தேன்.

நான் கோடி காட்டியபடி தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைக்கும் தன் முயற்சியை ரெலோ விடாது ஆரம்பித்து விட்டது. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு. சகல தலைவர்களுக்கும் இந்த ஆலோசனை சமர்ப்பணம்.

எனினும் தெரிவு செய்யப்பட்ட – மக்கள் செல்வாக்குள்ள – நாடாளுமன்ற உறுப்பினர்களை வெட்டி ஓடும் முயற்சியாக இது அமையா விட்டால் சரி...!

★ ★ ★

மற்றையவர்களின் நன்கொடைகளை – அன்பளிப்புகளை – தன்னுடையது போல மக்களுக்குக் காட்டுகின்ற –

அரச நியமனத்தைத் தனது சாதனையாகக் காட்டி வாக்குத் திரட்டுகின்ற –

அரச அதிகாரிகளை சட்ட விதிகளுக்குப் புறம்பாக நடக்கத் தூண்டி மிரட்டுகின்ற –

– இப்படிப் பல்வேறு வகையில் 'ஆட்டையைப் போடும்' நம் உள்ளூர் அரசியல்வாதியின் – அமுல் பேபியின் – நகர்வுக்கு 'செக் மேட்' வைத்து விட்டார்கள் ராஜபக்ஷக்கள்.

ஆட்டையைப் போடும் அரசியல்வாதி கவலைப்படத் தேவையில்லை. போட்ட முதல் அளவுக்கு அதிகமாகவே சுருட்டியாகி விட்டது. ஆகவே கையைக் கடிக்கப் போவதில்லை.

ஆனாலும் 'என் கனவு பாழ்' என்பது தான் கவலையான நிலைமை.

அவரை நம்பி எடுபிடிகளாகத் திரிந்த நமது அரச அதிகாரிகள்தான் இன்னும் பாவம். செய்த வினை துரத்தும் அல்லவா?

அது என்ன 'செக்மேட்' நடவடிக்கை? விவரம் நாளை பார்ப்போமா?

– மின்னல் –

---

## தமிழ்த் தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாளை மாலை 5 மணிக்கு மெய்நிகர் இணையவழி ஊடாக இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோருக்கு செல்வம் அடைக்கலநாதன் நேற்று மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலின் பின்னராக ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் அடிப்படையில் சிக்கல் மிகுந்த பிரச்சினைகளுக்கு தமிழ் மக்கள் முகம் கொடுத்து நிற்கின்றோம்.

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அரசு எமது தாயக பரப்பில் காணி நிலங்களை அபகரித்து வருகின்றது. தொல்லியல், அபிவிருத்தி, மாவலி திட்டம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு எனப் பல காரணங்களைக் கூறினாலும் அடிப்படையிலேயே திட்டமிட்ட குடியேற்றங்களை குறிவைத்த நடவடிக்கைகளாக இவை அமைந்திருக்கின்றன. அதேபோன்று மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அதிகாரங்களை மெதுவாக அரசு கையகப்படுத்தி வருகின்ற சூழலையும் காணுகின்றோம். இவற்றைத் தடுத்து நிறுத்தி இருக்கக்கூடிய அதிகாரங்களைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடும் எங்களுக்கு இருக்கின்றது.

சர்வதேச சூழலிலேயே எமக்குச் சார்பான பல விடயங்களுக்காக வல்லரசு நாடுகள் இலங்கை அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் இவ்வேளையில் நாம் ஒருமித்த நிலைப்பாட்டில் அரசியல் விடயங்களை தாயகப் பரப்பில் கையாள்வதன் மூலம் சாதகமான உள்ளக அரசியல் சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்த முடியும்.

ஆகவே, காலத்தின் தேவையைக் கருத்தில்கொண்டு எந்தெந்த விடயங்களில் தமிழ் மக்கள் மீது அக்கறை கொண்ட தமிழ்த் தேசிய கட்சிகள் ஆகிய நாங்கள் ஒருமித்த நிலைப்பாட்டில் வினையாற்ற முடியும் என்ற ஆரம்பகட்ட மெய்நிகர் இணையவழி ஊடான கலந்துரையாடலுக்கு உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.

தேர்தல் நோக்கங்கள், கட்சி நலன்கள் மற்றும் தனிப்பட்ட விரோதங்களை தாண்டி செயற்படும் நோக்கத்திலேயே இந்த அழைப்பு விடுக்கப்படுகின்றது.

நாளைமறுதினம் (நாளை) ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ள உங்கள் சம்மதத்தை எதிர்பார்த்து நிற்கின்றேன் – என்றுள்ளது.

---

## விஸ்தரிக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன எனக் கூறப்படுகின்றது.

ஜூலை 6ஆம் திகதி அவர் பதவியேற்பது பொருத்தமானதாக இருக்கும் என்று கட்சிக்குள் ஒரு தரப்பினர் கூறியுள்ளனர் எனவும், ஆனால் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பின்னர் பதவியேற்பதே பொருத்தமானது என்று மற்றொரு தரப்பினர் தெரிவித்துள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநரும் தேசிய அமைப்பாளருமான பஸில் ராஜபக்ஷ, தேசியப்பட்டியல் ஊடாகவே நாடாளுமன்ற உறுப்பினராகவுள்ளார். இதற்காக ஜயந்த கெட்டகொட அல்லது பேராசிரியர் ரஞ்சித் பண்டார ஆகியோரில் ஒருவர் பதவி விலகி பஸிலுக்கு இடம் வழங்கவுள்ளனர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்ற உறுப்பினரானதும் பொருளாதார விடயங்கள் தொடர்பான அமைச்சராகப் பதவியேற்கலாம் என்று கூறப்படுகின்றது.

---

## 30 வயதுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தடுப்பூசிகளும் கிடைக்கவுள்ளன.

அதேபோன்று, 20 இலட்சம் ஸ்புட்னிக் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, ஓகஸ்ட் மாதமளவில் 50 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகளும், 25 இலட்சம் சைனோவெக் தடுப்பூசிகளும், 20 இலட்சம் ஸ்பூட்னிக் தடுப்பூசிகளும் கிடைக்கவுள்ளன.

இறுதியாக, செப்டெம்பர் மாதத்தில் 30 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளன.

இவ்வருடம் செப்டெம்பர் மாதமளவில், ஒரு கோடி 30 இலட்சம் பேருக்குக் கொரோனாத் தடுப்பூசிகளை வழங்கக் கூடியதாக இருக்கும். அதன்படி, 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இக்காலப்பகுதியில் தடுப்பூசிகளை வழங்கக் கூடியதாக இருக்கும். இது மிகவும் மகிழ்ச்சிக்குரிய நிலைமையாகும் – என்றார்.

## 1, 859 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 49 ஆயிரத்து 926 ஆக எகிறியுள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 14 ஆயிரத்து 668 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 32 ஆயிரத்து 396 ஆக அதிகரித்துள்ளது.

---

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்டத்தில் ஒருவருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 05 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் 02 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

---

## தவறுகளைத் திருத்திக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காரணமாக எமது புலனாய்வுப் பிரிவு பலவீனமடைந்ததோடு, பாதுகாப்புப் பிரிவு சர்வதேசத்துக்கு முன்பாக அகௌரவப்பட்டது.

எமது புராதன இடங்கள், தொல்பொருள் பகுதிகள் பகிரங்கமாக அழிக்கப்பட்டன. 2009ஆம் ஆண்டு நாங்கள் முடிவுறுத்திய ஆயுதப் போராட்டம் மிகவும் பயங்கரமான தோற்றத்தில் மீண்டும் உருவாகியது. தேசிய பாதுகாப்பு குறித்து தற்போது வரை பாரிய முன்னேற்றத்தை அடைந்திருக்கின்றோம்.

பொறுப்புடைய பதவிகளுக்குத் தகுதியான அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு துன்புறுத்தல்களால் வீழ்ச்சியடைந்த பாதுகாப்புப் பிரிவின் மனநிலையை மீண்டும் நாங்கள் உறுதிப்படுத்தினோம். அன்று பலவீனமடைந்த புலனாய்வுப் பிரிவை மீண்டும் மறுசீரமைத்துள்ளோம்

கடந்த ஆட்சிக்காலத்தில் மறக்கப்பட்ட பாதுகாப்புத் திட்டங்களை மீண்டும் நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம். பாதாள உலகக் கோஷ்டியைக் கட்டுப்படுத்தியுள்ளோம். போதைப்பொருள் கடத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனையையும் ஓரளவுக்குக் கட்டுப்படுத்தியுள்ளோம். எமது கலாசாரம் உட்பட அனைத்தையும் அவமானப்படுத்தும் யுகத்தை நிறுத்தினோம்.

அனைவரினதும் அடையாளங்களைப் பாதுகாத்து, மற்றவர்களுக்கு இடையூறு அற்ற சமாதானமான சூழலை உருவாக்கிக் கொடுத்துள்ளோம். கடந்த காலத்தில் அச்சுறுத்தலை எதிர்கொண்ட அம்பாறை பொத்துவில் கடலோர விகாரை, தீகவாபி போன்ற கலாசார மத உரிமைகளை நாங்கள் பாதுகாத்துள்ளோம்.

இன்று எமது நாட்டு மக்கள் இனியும் ஒற்றையாட்சி குறித்து அச்சமடையத் தேவையில்லை. எமது நாட்டு உள்ளக விவகாரங்களில் வெளித்தரப்பினர் எவரும் தலையீடு செய்வதற்கு எமது அரசு எந்த வகையிலும் இடமளிக்காது. தேசிய பாதுகாப்பை எனது அரசு உறுதிசெய்துள்ளது.

கொரோனா நெருக்கடிக்கு மத்தியிலும் வெளிநாட்டுக் கடன்களை செலுத்த வேண்டிய தருணத்தில் செலுத்த முடியாமற் போகும் என்று எதிர்க்கட்சியினர் வெளியிட்ட ஆருடங்களை தகர்த்தெறிந்து இலங்கையால் கடன்களை சரியான நேரத்தில் செலுத்த முடிந்தது.

பல்வேறு சமூக வலைத்தளங்களில் அரசின் அபிவிருத்திப் பணிகளுக்கு இடங்கொடுக்கப்படவில்லை. தனிப்பட்ட ரீதியில் சில விம்பங்களை பெரிதுபடுத்திய போதிலும் அரசின் உண்மையான பக்கங்களை மக்களுக்கு வெளிப்படுத்துவது தடுக்கப்பட்டது. அதனால் மக்கள் மத்தியில் அரசு மீது பொய்யான விம்பமே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

எனது ஆட்சியில் எந்த அரசியல் நியமனங்களும் மேற்கொள்ளப்படவில்லை. நீதித்துறையிலும் அதேபோன்ற கொள்கையையே பின்பற்றுகின்றேன்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட தவறுகளைத் திருத்திக்கொண்டு முன்நகர்ந்து பயணிப்போம் – என்றார்.

# 11 மாத காலத்தில் விடுதலையாக இருந்தவருக்கே பொது மன்னிப்பு

## குரலற்றவரின் குரல் அமைப்பு



11 மாத காலத்தில் தண்டனைக் காலம் முடிவடைந்து விடுதலையாக இருந்தவருக்கே ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கி விடுவித்துள்ளார் எனகுரலற்றவரின்குரல் அமைப்பின்ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்துள்ளார்.

பொசனை முன்னிட்டு ஜனாதிபதியால் 16 தமிழ் அரசியல் கைதிகள் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சூரியகாந்தி ஜெயச்சந்திரன் விடுவிக்கப்பட்ட நிலையில் அவரை நேரில் சந்தித்து முருகையா கோமகன் நலம் விசாரித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

இன்றைய தினம் (கடந்த வியாழன்) விடுவிக்கப்பட்ட அரசியல் கைதிகளில் பலருக்கு தண்டனை காலங்கள் நிறைவடைய சில மாதங்களே உள்ள நிலையில் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜெயச்சந்திரனும் கடந்த 13 ஆண்டுகளாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவருக்கான தண்டனைக் காலம் இன்னமும் 11 மாதக் காலத்தில் நிறைவடையவுள்ள நிலையிலையே பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் பலர் 11 வருடங்கள் முதல் 26 வருடங்களுக்கு மேலாகக் கூடத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அண்மையில் கூட விடுதலைப்புலிகள் மீள் உருவாக்க குற்றச்சாட்டில் சிலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் உட்பட குற்றச்சாட்டுக்கள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், தீர்ப்பு வழங்கப்பட்டு மேன்முறையீடு செய்தவர்கள் என பல அரசியல் கைதிகள் இன்றும் சிறையில் வாடுகின்றனர். அவர்களுக்கு குறைந்த பட்சமாக புனர்வாழ்வு அளித்தாவது அவர்களை விடுவிக்க வேண்டும். என கேட்டுக்கொள்கிறோம். அண்மையில் அரச தரப்பில் இருந்து அரசியல் கைதிகளின் விடுதலைக்காக குரல் கொடுத்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிற்கு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேவேளை அரசியல் கைதிகளை விடுவித்தமைக்காக ஜனாதிபதிக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். – எனத் தெரிவித்தார்.

# யாழில் சினோபோர்ம் தடுப்பூசி 2 ஆவது டோஸ் வழங்கல்

யாழில் சினோபோர்ம் கொவிட் – 19 தடுப்பூசியின் 2 ஆவது டோஸ் வழங்கும் பணி எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

முதல் கட்டமாக சினோபோர்ம் கொவிட் – 19 தடுப்பூசி பெற்ற 50 ஆயிரம் பேருக்கே இந்த இரண்டாவது டோஸ் வழங்கப்படவுள்ளதாக பிரதமரின் இணைப்புச் செயலாளர் கீதாஞ்சன் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதற்காக சுகாதார அமைச்சால் 50 ஆயிரம் சினோபோர்ம் தடுப்பூசி டோஸ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த மே மாத இறுதியில் 50 ஆயிரம் பொதுமக்களுக்கு சினோபோர்ம் கொவிட் – 19 தடுப்பூசி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உர இறக்குமதித் தடை; அமைச்சரின் விளக்கம்



கொப்போஸ் உர இறக்குமதியைத் தற்காலிகமாக இடைநிறுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

சேதன பசளை இறக்குமதியை தற்காலிகமாக இடைநிறுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் இதற்கு முன்னர் தெரிவித்திருந்த போதிலும் அதற்கான தீர்மானம்எடுக்கப்படவில்லைஎனஅவர்தெரிவித்துள்ளார்.

# மாகாணங்களுக்கு இடையே போக்குவரத்து தடை தொடர்ந்தும் அமுலில் இருக்குமாம்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறுகின்றார்



மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துத் தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், சிரேஷ்ட பதில் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமுலில் இருந்த பயணக் கட்டுப்பாடு நேற்று காலை முதல் தளர்த்தப்பட்டாலும், மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயணத்தடை தளர்த்தப்பட்டாலும், தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ளவர்கள் மற்றும் தனிமைப் படுத்தப்பட்ட வீடுகளில் இருப்பவர்கள் தனிமைப்படுத்தல் காலம் நிறைவடையும்வரை வெளியில் வரமுடியாது எனவும் அவர் கூறியுள்ளார்.

# நீர்கொழும்பு வியாபாரி கொலை மனைவி மற்றும் ஊழியர் கைது

நீர்கொழும்பு பகுதியில் வியாபாரி ஒருவரின் கொலை சம்பவம் தொடர்பில்அவருடையமனைவிமற்றும்அவருடைய நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்ஒருவர்ஆகியோர்கடந்தவியாழக்கிழமைகைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் தொடர்பில் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் இந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதை அடுத்து 30 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நீர்கொழும்பு பகுதியில் விற்பனை நிலையம் ஒன்றை முன்னெடுத்து சென்ற வியாபாரி ஒருவர் கடந்த ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி கொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இறைச்சிக் கோழி விற்பனை
புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
துளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
எமது சேவையூடாக 11 kg க்கு மேல் பொதிகள் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கான
மாபெரும் பரிசுப்போட்டி
நீங்களும் வெற்றியாளராகலாம்...
070 330 5500
075 330 5500
077 888 9388
லண்டன் 1000/= (11 kg க்கு மேல்)

பிரான்ஸ்,ஜேர்மனி,பெல்ஜியம், டென்மார்க்,நெதர்லாந்
11 Kg க்கு 13,000/=
மேலதிக ஒவ்வொரு கிலோவுக்கும் 1100/=
1ம், 2ம், 3ம் பரிசு : 15kg பொதிகள் அனுப்பும் செலவு இலவசம்...
4 முதல் 10 வரை : 3600/=
பெறுமதியான ஆடைகளுக்கான 10L சலவைத்திரவம் 01 இலவசம்...
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி கைதடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு கனகராயன் குளம்
மல்லாவி மன்னார் வவுனியா திருகோணமலை மட்டக்களப்பு கொழும்பு

INDIVIDUAL
ENGLISH CLASSES
K.GANESH (BA. Pera)

Grade - 7 தொடக்கம்
பட்டதாரிகள்,
தொழில் புரிவோர்,
English Medium Courses
செய்பவர்களுக்கு,
Fluent Spoken.
077 766 8725
நீராவியடி , யாழ்ப்பாணம்

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தோல்வியில் கோட்டா அரசு

'தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என அடிக்குமாம்' என்பார்கள்.

அரசியல் தலைவர்களும், அரசுத் தலைவர்களும் இப்படித்தான் போலும். தங்களுக்குச் சிக்கல் என்றால் தான் ஓங்கி ஒலிப்பார்கள், இல்லாவிட்டால் பிறர் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன என்று உதாசீனம் செய்வார்கள்.

நாட்டில் கொவிட் தடுப்பை ஒட்டி முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளைப் பற்றி அவதானிக்கும் போது அப்படித்தான் தோன்றுகின்றது.

அதுவும் சமுதாய மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன், தமது அரச பதவி இக்கட்டுக்களுக்கு மத்தியிலும் கொரோனாத் தொற்றுப் பரவல் தடுப்பு நடவடிக்கை தொடர்பாக துணிச்சலுடன் – புள்ளி விவரங்களோடு – வெளியிட்ட தகவல் ஆட்சித் தரப்பின் உண்மை முகத்தை, முகமூடியைக் கிழித்து அம்பலப்படுத்தியிருக்கின்றது.

கடந்த வருடம் இறுதியிலேயே பல நாடுகளும் தத்தமது மக்களுக்குக் கொரோனாத் தடுப்பூசியை ஏற்றத் தொடங்குகையில் நமது நாட்டில் அது காலம் பிந்தி மார்ச் மாதத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது.

மிக மிக மந்தமாக அந்தப் பணி நடைபெறுவதாக அவர் புள்ளி விவரங்களுடன் அம்பலப்படுத்துகின்றார்.

இன்று வரை நாட்டின் சனத்தொகையில் 11.4 வீதமானோருக்கே முதலாவது தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

அந்தத் தடுப்பூசியின் முழு டோஸையும் – இரண்டாவது தடுப்பூசியையும் – பெற்றவர்கள் ஆக 3.9 வீதத்தினர்தான்.

கொரோனாவுக்கு எதிராக வலிமையான காப்பரணை – தடுப்பை – நாடு கொண்டிருக்க வேண்டுமானால் குறைந்த பட்சம் எண்பது வீதமான மக்களுக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்க வேண்டும். அந்த இலக்கை அடைய இந்த வீதத்தில் தொடர்ந்து இலங்கை முன்னேறுமானால் முதலாவது தடுப்பூசியைப் போட்டு முடிக்க மூன்று வருடங்களும், இரண்டாவது தடுப்பூசியைப் போட்டு முடிப்பதற்கு ஆறு வருடங்களும் எடுக்கும் என்ற உண்மையை – யதார்த்தப் புறநிலையை – சமுதாய மருத்துவத்துறையில் நிபுணரான மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் சுட்டிக்காட்டுகின்றார்.

அவர் தெரிவிக்கின்றவை போல – பல்வேறு நாடுகளும் தங்களது முழு ஜனத் தொகைக்கும் இவ்வருட இறுதிக்குள் கொரோனாத் தடுப்பூசியை முற்றாகச் செலுத்தி முடிக்கவும் –

திரிவடைந்த கொரோனா வைரஸ்கள் புதிதாகப் பரவி வரும் நிலையில், தேவைப்பட்டால் ஆண்டு தோறும், அந்தப் புதிய வைரஸ்களை எதிர்கொள்ளக் கூடிய புதிய தடுப்பூசிகளை தவறாது தமது மக்களுக்கு வழங்கவும் – தயாராகி வருகின்ற நிலையில், சிறிதளவு தடுப்பூசிகளைக் கைவசம் வைத்துக் கொண்டு, அவற்றை பொதுவாக ஏற்றுவதன் மூலம் நாட்டைக் காக்க முடியும் என்று இங்கு ஆளும் தரப்பினர் நகைச்சுவை நாடகங்களை அரங்கேற்றி வருகின்றனர் என்பது உண்மையே.

இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விவகாரம் என்னவென்றால் –

மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் சுட்டிக்காட்டுவது போல, இத்தகைய நகைச்சுவை (விசனச் சுவை) அத்தியாயங்களை அரங்கேற்றி வருபவர்கள் எல்லோரும், இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றிக் கொண்ட அந்த 3.9 வீதத்துக்குள் அடங்குபவர்கள் தாம். தேவையான தடுப்பூசிகளைத் தாம் ஏற்றிக் கொண்டு விட்டமையால் தமக்குத் தொற்று ஏற்படாது என்ற நம்பிக்கையில் 96 வீத மக்களின் வாழ்வுக்கும் உயிருக்கும் ஆபத்து ஏற்படுத்தக் கூடிய மரண விளையாட்டை நகைச்சுவை அங்கமாக அவர்கள் அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்றைய நெருக்கடி நிலையில் – கொரோனாத் தொற்றுப் பேரிடர் சமயத்தில் – நாட்டினதும் அரசினதும், ஆட்சியாளர்களினதும் முதற் கவனமும், முழுக் கவனமும், கொரோனாத் தொற்றிலிருந்து மக்களைக் காப்பாற்றும் விதத்தில் காப்பரண் ஏற்படுத்துவது தான்.

அப்படிக் காப்பரண் ஏற்படுத்துவதில் முக்கிய – பிரதான – அம்சம் தடுப்பூசி போடுவதாகும்.

நாட்டின் பிற அத்தியாவசிய தேவைகள், முன்னுரிமை விடயங்களை எல்லாம் புறம் ஒதுக்கித் தள்ளி வைத்து விட்டு மக்களுக்குத் தேவையான தடுப்பூசிகளை காலதாமதமின்றி வெளிநாடுகளில் இருந்து பெற்றுக் கொண்டு – தருவித்து – மக்களுக்கு வழங்குவது அரசினது பிரதான கடமையாகும்.

ஆனால், அதை விடுத்து, பிற விடயங்களில் எல்லாம் கவனத்தைச் செலுத்தி நாட்டைப் பேராபத்து நிலைக்குள் தள்ளி வருகின்றது கோட்டா அரசு.

கொரோனாத் தடுப்பூசிகளை வெளிநாடுகளில் இருந்து பெறுவதிலும், கோட்டா அரசின் இராஜதந்திரமும், சர்வதேசத் தொடர்பாடலும் தோல்வி கண்டு விட்டன என்பதையே இன்றைய பின்னடைவு நிலைமை நமக்கு உணர்த்தி நிற்கின்றது.

மக்களுக்குரிய காப்பரணை ஏற்படுத்திக் கொடுப்பதில் தனது தலையாய பொறுப்பை – கடமையை – கோட்டை விட்டமை மூலம் மக்களுக்குத் துரோகம் இழைத்துள்ளது கோட்டா அரசு.

## தொற்றாளர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தால் கடுமையான பயணக்கட்டுப்பாடு விதிக்கவேண்டி வரும்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் எச்சரிக்கை



தற்போது பதிவாகும் கொவிட் தொற்றாளர்களில் அதிகரிப்பு ஏற்பட்டால் கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டி ஏற்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (வெள்ளிக்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது நாள் ஒன்றுக்கு 2 ஆயிரம் முதல் 2 ஆயிரத்து 200 வரையிலான கொவிட் தொற்றாளர்கள் பதிவாகின்றனர். இதன் காரணமாக பயணக் கட்டுப்பாட்டைக் கடுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். நாம் கடந்த இரண்டு மூன்று நாள்களில் அவதானித்திற்கு அமைய மக்கள் சுகாதார வழிமுறைகளை மீறிச் செயற்படுவதை அவதானிக்க முடிந்தது. இவ்வாறு நீடித்தால் நோயாளர்கள் மீண்டும் அதிகரிக்கக் கூடும். பின்னர் கடுமையான பயணக் கட்டுப்பாட்டை விதிக்க வேண்டி ஏற்படும். – என்றார்.

## கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் மன்னாரில் சில பகுதிகள் முடக்கம்

மன்னார் – தலைமன்னார் பியர் மேற்கு மற்றும் கிழக்கு கிராம அலுவலகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்துள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தியர் த.விநோதன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

தலைமன்னார் பியர் பகுதியில் இதுவரை 62 பேர், வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஆகவே தலைமன்னார் பியர் மேற்கு மற்றும் தலைமன்னார் பியர் கிழக்கு ஆகிய இரண்டு கிராம அலுவலகர் பிரிவுகளும் நேற்று காலை முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் குறித்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.மாதிரிகள் கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு தொற்று ஏற்பட்ட வைரஸ் புதிதாக திரிவடைந்த வைரஸின் ஏதாவது ஒன்றா? என்கின்ற முடிவுகள் ஒரு வாரத்தில் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.

அதாவது, நூறு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொண்டால் 6 பேருக்கு தொற்று உறுதி செய்யப்படுகின்றது. இது அபாயகரமான நிலைமையாகும்.

எனவே மக்கள் இதனை உணர்ந்து, சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிப்பதுடன் அநாவசியமாக வெளியில் நடமாடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இதேவேளை மன்னாரில் இதுவரை 5 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கடவுச்சீட்டு விநியோகத்துக்கு விசேட வேலைத்திட்டங்கள்

கடவுச்சீட்டு விநியோகத்துக்கான விசேட வேலைத்திட்டம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் பிரதான காரியாலயம், மாத்தறை, வவுனியா, கண்டி மற்றும் குருணாகல் ஆகிய பிராந்திய அலுவலகங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவானோருக்கு மாத்திரமே சேவைகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய, கட்டாய தேவை உள்ளவர்கள், தமது வசிப்பிடத்துக்கு அருகிலுள்ள காரியாலயத்தை, கீழ்வரும் இலக்கங்கள் ஊடாக தொடர்புகொண்டு, நேரத்தை முன்பதிவு செய்துகொண்டதன் பின்னர் சேவையை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பத்தரமுல்லையிலுள்ள தலைமை காரியாலயம் – 070 710 1060 அல்லது 070 710 1070

மாத்தறை பிராந்திய அலுவலகம் – 041 54 12 212 – 041 51 04 444

கண்டி பிராந்திய அலுவலகம் – 081 56 24 509, 081 56 24 470

வவுனியா பிராந்திய அலுவலகம் – 025 56 76 344, 025 567 6345

குருணாகல் பிராந்திய அலுவலகம் – 037 555 0562, 037 555 0563

## மன்னார் அரச அதிபர் தலைமையில் அமைக்கப்பட்டது இளைஞர் குழு



மன்னார் மாவட்டத்தில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், மக்கள் உரிய சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்கின்றார்களா? என்பதை ஆராய்ந்து பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் அமைக்கப்பட்ட இளைஞர்களைக் கொண்ட குழு தங்களுடைய பணியை ஆரம்பித்துள்ளது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல் தலைமையில் குறித்த குழு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நேற்று (வெள்ளிக்கிழமை) தமது பணியை முன்னெடுத்துள்ளனர்.

இளைஞர்களைக் கொண்ட குறித்த குழு உறுப்பினர்களுக்கு அவர்களுக்கான பாதுகாப்பு உடைகளை வழங்கி அவர்கள் மூலம் மக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்க்கும் செயல்பாட்டை மேற்கொள்ள ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் றோய் பீரிஸ் தலைமையில் குறித்த பணியாளர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் மன்னார் பஸ் தரிப்பிட பகுதியில் தமது பணியை அவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

மக்கள் உரிய முறையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுகின்றார்களா?, வர்த்தக நிலையங்கள், பஸ்கள் போன்றவற்றில் மக்கள் உரிய சமூக இடைவெளியை பின்பற்றி முகக்கவசம் அணிந்துள்ளார்களா? என்பதை ஆராய்வதோடு, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளையும் குறித்த இளைஞர் குழுவினர் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் Kalaikkathiredu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

தொகுப்பு:-
எஸ். சாரலன்

## 32 ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**311. உலக மழைக்காடுகள் தினம் எப்போது?**
**312. இலங்கையின் தற்போதைய ஊடக அமைச்சர் யார்?**
**313. 2016 ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவிற்கு வெண்கலப் பதக்கமொன்றை பெற்றுக்கொடுத்த வீராங்கனை யார்?**
**314. பிரபல்யமான கால்பந்து வீரரான கிறிஸ்ரியானோ ரொனால்டோ அண்மையில் எந்த நிறுவனத்தில் உற்பத்தி பொருளை ஒதுக்கி வைத்ததால் அந்த நிறுவனத்திற்கு 230 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டது?**
**315. 55 ஆவது ஆண்டு விழா எவ்வாறு அழைக்கப்படும்?**
**316. தேசங்களின் செல்வம் என்ற பிரபல்யமான நூலை எழுதியவர் யார்?**
**317. கோள்கள் நீள்வட்டப்பாதையில் சூரியனைச் சுற்றி இயங்குகிறது எனும் கருத்தை முன்வைத்த ஜேர்மனிய விஞ்ஞானி யார்?**
**318. பஹ்ரேனின் நாணயம் எவ்வாறு அழைக்கப்படும்?**
**319. மஞ்சள் நதி என அழைக்கப்படும் நதி காணப்படும் நாடு எது?**
**320. உலகின் மிகப்பெரிய இந்துக் கோவில் யாது?**

பெயர் :- ..................................................
அடையாள அட்டை:- ..................................
முகவரி :- ..................................................
மின்னஞ்சல் முகவரி:- ................................
தொலைபேசி இலக்கம்:- ...........................

## 30 ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**291. இளங்கோவடிகள்**
**292. நீல் ஆம்ஸ் ரோங்**
**293. கெல்வின்**
**294. Centeral Processing Unite**
**295. வசபன்**
**296. மே-01**
**297. கலிலியோ கலிலி**
**298. மகாவலி கங்கை**
**299. இந்தியா**
**300. சஹாரா பாலைவனம்**

## 24 ஆம் திகதி வெளியான 30 ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1. பி. சயந்தன் - அரியாலை (10 சரி)
2. வை.அபிமாறன் (09 சரி)
3. ச.கிருஷன் - உடுப்பிட்டி (10 சரி)
4. ஏ.சுதர்ஷன் - யாழ்ப்பாணம் (10 சரி)
5. எஸ். ஸ்ரீஇராமச்சந்திரன் - வத்திராயன் (10 சரி)
6. எஸ். சதுர்ஜினி - அல்வாய் (10 சரி)
7. எஸ்.சற்குணராஜா - கொழும்பு (09 சரி)
8. ஏ.துஷான் - நீர்வேலி (10 சரி)
9. பி.பிரசாந் - ஆவரங்கால் (09 சரி)
10. கே.ஸ்ரீதரன் - கொழும்பு (09 சரி)
11. ஐ.கார்த்திகன் - யாழ்ப்பாணம் (10 சரி)
12. ரி.சராதரன் - குப்பிளான் (10 சரி)
13. கே.அனுஷன் - ஏழாலை (10 சரி)
14. ம.அஷ்வினி - உடையார்கட்டு (7 சரி)

## இலங்கை - ஆஸ்திரேலிய கம்பன் கழகங்கள் நடத்தும் மாதாந்த இயலரங்க ஆனிமாத நிகழ்வு

அகில இலங்கைக் கம்பன் கழகமும் ஆஸ்திரேலியக் கம்பன் கழகமும் இணைந்து நடத்தும் மாதாந்த இயலரங்கின் ஆனிமாத நிகழ்வு இன்று (சனிக்கிழமை) மாலை 3.30 மணிக்கு (இலங்கை நேரம்) நிகழ்நிலை நிகழ்வாக நடைபெறும்.

இந்த நிகழ்வு, அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் பொருளாளர் சோதிலிங்கம் சுதனின் மங்கல ஆரத்தியோடும், ஆஸ்திரேலியாவின் சிட்னியைச் சேர்ந்த திருமதி லக்ஷ்மி குமரகுருபரனின் கடவுள் வாழ்த்தோடும் ஆரம்பிக்கவுள்ளது.

இந்த நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக, கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்ஜின் தலைமையில் 'திருவாசகம் என்னும் தேன்' எனும் பொருளிலான கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில், 'திருவாசகம் ஒருபக்திப் பனுவல்' என்று திருமதி பாலம் இலக்ஷ்மணன், 'திருவாசகம் ஓர் அறிவியல் நூல்' என்று பொற்கிழிக் கவிஞர் சொ.சொ.மீ.சுந்தரம், 'திருவாசகம் ஒருகவிதை இலக்கியம் ' என்று பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர்.

உலகெங்கிலும் நோயும் அச்சமும் நிறைந்திருக்கும் இன்றைய நிலையில் இறைபக்தியின் உயர்வை பெரியோர்கள் கூடி சிந்தித்து எம்மைப் பரவசப்படுத்த இருக்கிறார்கள். இந்நிகழ்வை அனைவரும் கண்டுகளித்து பயன் கொள்ளுங்கள். ஒவ்வொருமாதமும் நிறைவுச் சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு முந்துதமிழ் நிகழ்வு இடம்பெறும்.

Akila ilangai kamban kazhagam, Kamban kazhagam australia எனும் யூடியுப் முகவரிகளிலும், Kambavarithy Ilankai Jeyaraj, Kamban Kazhagam Australia எனும் பேஸ்புக் முகவரிகளிலும் பார்த்து மகிழலாம் இணையவழி நேரலையாக.

## யாழ். நல்லூரில் விடுதி ஒன்று முற்றுகை இரு பெண்கள் உட்பட அறுவர் கைது

யாழ்ப்பாணம், நல்லூர் கோயில் வீதியில் கலாசார சீரழிவு நடவடிக்கைகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட விடுதி ஒன்று முற்றுகையிடப்பட்டு இரண்டு இளம் பெண்கள், 3 இளைஞர்கள் மற்றும் விடுதி உரிமையாளர் ஆகிய 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் மேனன் தலைமையிலான பொலிஸ் பிரிவினர் நீதிமன்றின் அனுமதி பெற்று நேற்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் முன்னெடுத்த விடுதி முற்றுகையின் போதே இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

நல்லூர் யாழ்ப்பாணம் - கோயில் வீதியில் உள்ள விடுதி ஒன்றில் கலாசார சீரழிவு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் விடுதியைச் சோதனையிட்டபோது மாறுபட்ட தகவல்களை வழங்கிய இளைஞர்கள் மூவரும் இரண்டு இளம் பெண்களும் அங்கு கைது செய்யப்பட்டுள்ளனர்.



குருநகர் மற்றும் மானிப்பாயைச் சேர்ந்த 21, 24 வயதுடைய இளம் பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இளைஞர்களில் ஒருவர் உரும்பிராயைச் சேர்ந்தவர் ஏனைய இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்கள் 6 பேரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## அமைச்சர் வாசுதேவ வைத்தியசாலையில்!



நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாரடைப்புக்கு சிகிச்சை பெறுவதற்காகவே அவர் இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, 'ஸ்டென்ட்' அறுவை சிகிச்சை செய்ய திட்டமிட்டுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.



- செல்லத்துரை ரவீந்திரன் -


இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 47

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**144.சிவநாயகத்தின் காரசாரமான எழுத்துகள் எப்படி அமைந்தன?**

அந்த வார்த்தைகளின் – தாக்கத்திற்காக அதன் அமைப்புக்காக – அதனை அப்படியே தந்துள்ளேன்.




நீதித்தராசு நீதி என்ற அச்சாணியில் சுழலவில்லை என்பதை சிவநாயகம் நன்கறிந்தவர். ஆயினும் அவரது கோபம், உணர்ச்சிகளின் வெளிப்பாடு தமிழ் மக்களின தும் சர்வதேசத்தினதும் விழிப்புக்காகவும் எழுதப்பட்டன.

மேலும் "நான்கு கால் விலங்குகளும், பறவைகளும் உங்களோடு இணைந்து புத்தர் பிரான் தரிசித்த இந்த பூமியில் சுதந்திரமாக வாழ வேண்டுமென்பதற்காக வில் பத்து, யால, குமண என்று சரணாலயங்கள் (Sanctuaries) அமைக்கிறீர்கள். ஆனால் ஏன் அதை உங்களுடைய சகோதரர்களுக்கு மறுக்கிறீர்கள்?" – என்று நேரடியாக சந்திரிகாவைக் கேட்டார் அவர்.

"இனிமேல் உங்களுக்கு யுத்தம் என்பது ஒரு வழியாக இருக்க முடியாது. சிங்கள மக்கள் புத்திசாலித்தன மானவர்களாக இருந்தால், ஒரு தீவு ஒரு நாட்டை மட்டும் தான் அடக்க வேண்டும் என்று கடவுள் ஏதும் நியதிகள் தரவில்லை என்பதையும், ஐ.நா. சபை ஒரு தேசம் எந்தளவில் இருந்தால் மட்டுமே அங்கீகரிக்கப்படும் என்பதற்கு நியதி வைக்கவில்லை என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ளுவார்கள். சமாதானமாக இரு இன மக்களும் ஒத்து, இரு தேசங்களாக வாழ்வது கடின மாகப்பட்டால் இருவரும் வெவ்வேறு மக்களாக தனித் தனியாக வாழ்வதே நல்லது." – என்றும் குறிப்பிட்டார்.

விடுதலைப் போராட்டத்துக்கும் புலிகளுக்குமாக சிவநாயகம் எடுத்த நிலைப்பாடு சர்வதேச தமிழ் மக்களுக்கு மட்டும் அல்ல, மற்றையோருக்கும் குழப்பத்தைக் கொடுத்தது.

தமிழ் மக்கள் என்ன கோருகிறார்கள், ஆண்டாண்டு காலம் கேட்ட சுயாட்சியா அல்லது அது தரப்படாவிட்டால் ஒரு தனி அரசா, இன்றில் சுயநிர்ணயமா? அந்த சுயநிர்ணயம் இறைமை உள்ள தனி நாடா? – இவை போன்ற மேலும் பிரச்சாரங்களை – கேள்விகளை – தமிழீழக் கட்டமைப்புக்களின் பின் வலுக்கும் சர்வதேச நாடுகளின் தரப்புகள் தமிழ் பிரதிநிதிகளிடம் கேட்க தொடங்கினார்கள். 'உங்களுக்கு அட்டூழியங்கள் நடக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் தீர்வாக என்னதான் கேட்கிறீர்கள்!' – எனக் கேள்விகள்.

அன்று தோன்றிய – பிறந்த – அந்தக் கேள்விகள் இன்னும் எங்களது நிலைப்பாடுகளால் வளர்ந்து கொண்டே போகின்றன. இனப்படுகொலை என்ற வாதத்தையும் உள்ளடக்கி தற்சமயத்துக்கு அவற்றின் விவரிப்பைத் தவிர்ப்போம்.

**145.அப்படியானால் மற்றைய புலம்பெயர் சமூகங்களோ அல்லது புத்திஜீவிகளோ இதன் விளைவுகளை முன்னெடுக்கவில்லையா?**

நாங்கள் சர்வதேசத்துக்கு இசைவான தீர்வு திட்டங்களைச் சமர்ப்பித்து அவற்றிலிருந்து முன்னேற வேண்டும் என்று வாதங்கள் எழுப்பப்பட்டன. பொட்டல் பொட்டல்களாக இந்தக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான ஒரு தீர்விலிருந்து இந்தியாவின் அனுசரணையோடு, அன்றில் அதற்கும் சில வழிகளில் மேலான சந்திரிக்காவின் பொதியை ஏற்று, முன்னேறலாம் என்ற அபிப்பிராயங்களுக்கு சர்வதேசங்களே அழுத்தங்கள் கொடுத்தன. ஆனால் அவை எல்லாமே நிராகரிக்கப்பட்டன.

வன்னியின் நிலைப்பாட்டில், அவர்களது சர்வதேச அமைப்புக்கள் இக்கருத்துகளுக்கு எதிரான பிரச்சாரங்களைத் தூண்டிவிட்டன. தமிழர் செறிந்து வாழ்ந்த ஒவ்வொரு நாட்டிலும் அங்கிருந்த புலம்பெயர் அமைப்புக்களின் தலைவர்கள் கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட 'கட்டமைப்புக்கு மேல்' என்றே மனுக்களும் தீர்மானங்களும் தாம் வசித்த நாட்டின் அரசாங்கங்களுக்குக் கொடுத்தனர்.

அத்தோடு இரண்டு முக்கிய ஆதரவாளர்கள் அவர்களுக்காகப் பரப்புரைகள் செய்ய முன்வந்தனர். ஒருவர் – குமார் பொன்னம்பலம், பிரசித்த வழக்கறிஞர். தமிழர் அரசியலில் பெரும் வகிபாகம் வகித்த பொன்னம்பலத்தின் மகன். காலம் காலமாகக் கொழும்பிலேயே குடியிருந்து தொழில் நடத்தியவர். தமிழர் விடுதலைக் கூட்டணி பற்றி தாழ்வான அபிப்பிராயம் கொண்டு, அவர்களின் ஆதரவிலே அல்லது ஆளுமையில் விடுதலைப் புலிகளும் இயங்குகிறார்கள் என அபிப்பிராயம் கொண்டவர். இவர் முக்கியமாக மனித உரிமை மீறல்கள் பற்றியும், விடுதலைப் புலிகள் அதற்கெதிராக – தமிழ் மக்களுக்காக – நடத்தும் தீர மிக்க போராட்டங்களையும் உயிர்த் தியாகங்களையும் நியாயப்படுத்தி சிறிலங்காவிலும் வெளிநாடுகளிலும் பேசினார். அவரது பேச்சு வல்லமையாலும் ஆற்றலாலும் விடுதலைப்புலிகள் அவரை ஜெனிவாவில் சர்வதேச மனித உரிமை மன்றின் முன் அதிகமாக பாவித்தனர். அவர்களோடு சேர்ந்து இயங்கிய மனித உரிமைக்காக தமிழர் நிலையம் (Tamil Center for Human Rights) என்ற அமைப்பு அவர்களின் ஜெனிவா விவகாரங்களை கவனித்தது. ஆகவே, ஊரிலிருந்தாலும் அவர்களுக்கு அங்கிருந்த மனித உரிமைகள் பற்றித் தகவல்கள் தருவதும், ஜெனீவாவில் பிரதிநிதிகளை சந்திப்பதுவும், அதன் பின் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் ஏற்பாடுகளில் சென்று ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்களுக்கு நிலைமைகளை எடுத்துச் சொல்வதிலும் உறுதுணையாக இருந்தார்.


குமார் பொன்னம்பலம்

**146. அரசியல் தீர்வு என்பது பற்றி அவர் எந்தக் கணிப்பு கொண்டிருந்தார்?**

அரசியல் விடுதலைப் புலிகளின் கைகளுக்கு மாறிவிட்டது. அது அவர்கள் தீர்மானிக்க வேண்டியது. அதனை குப்பை அரசியல் நடத்துவோர் குழப்பக்கூடாது என்ற அபிப்பிராயம் அவரிடம் இருந்தது. அவர் முக்கியமாக மனித உரிமை மீறல்களில் கவனம் செலுத்தி விடுதலைப் புலிகளின் போராட்டங்களுக்கு வலுச் சேர்த்தார். தனது சட்ட வாதங்களினாலும் ஆளுமைகளினாலும் சர்வதேச மனித உரிமை சபையில் பலரையும் கவர்ந்தார். அவரது பங்களிப்பு காத்திரமாக இருந்தது. பல தமிழ் மக்கள் அவர் செய்த பங்களிப்பு பெருமதிப்பு கொண்டவை என்று கருதினார்கள். மனித உரிமைகளிலிருந்து படிப்படியாக தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்றும் அவர்களுக்கு ஒரு நியாயமான தீர்வு வேண்டும் என்றும் என்ற கருத்தாக்கங்களையும் முன்வைக்கத் தொடங்கினர். அவர் சிறிலங்காவிலோ வெளியூர்களிலோ அசாதாரண தைரியத்துடன் தனது எதிரிகளுக்கு மூக்கு உடைப்பது போலவே பேசினார்.

**Tamil Center for Human Rights** இயக்குநராக விளங்கிய டியர்த்தி மக்கோனல் (**Deidre McConne**) அவரைப் பற்றிச் சொல்லும் பொழுது "ஜெனிவாவில் அவரது வாதங்களுக்கு, ஐ.நாவின் அதிகாரிகள் எவ்வாறு பதிலளித்தனர் என்பதை நான் கவனித்தேன். அவரது வாதங்களும் அவை முன்வைக்கப்பட்ட விதமும் பலமானவை. அந்த வாதங்கள் அவரது நேர்மையான, உண்மையான நம்பிக்கைகளிலிருந்தும், அவரது அறிவுபூர்வமான அனுபவங்களிலிருந்தும் வந்தவை. நீதிக்கும், நியாயத்திற்கும் உணர்ச்சியான பற்றும், அநீதியிலும் அட்டூழியங்களிலும் சிக்கித் தவிக்கும் அவரது சகோதர, சகோதரிகளுடன் அவருக்கு ஈர்ப்பும் வாஞ்சையும் இருந்தன. அவர் தன் பேச்சைக் கேட்பவர்களை அக்கறைப்படாமல் இருக்க விடவில்லை. அல்லது அவர்களைத் தூங்க வைக்க தேவையில்லாத அளவுக்கு மீறிய விவரங்களை தர முற்படவில்லை. அவர் முக்கியமானவற்றை தெரிவித்தார். அதனால் அவரைச் சந்தித்தவர்கள் தமிழர்களுக்காக ஏதோ செய்ய வேண்டும் என்று துடித்தார்கள்" – என்கிறார்.



# தடுப்பூசி மருந்தேற்றலில் நகைச்சுவை நாடகங்களும் போலி மருந்து வியாபாரிகளும்

**மருத்துவர் முரளி வல்லிபுரநாதன்**
**(சமுதாய மருத்துவ நிபுணர்)**

கடந்த மார்ச் மாதத்தில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசி மருந்தேற்றும் திட்டமானது மிகவும் மெதுவாக இன்று வரை 11.4 வீத மக்கள் ஒரு தடுப்பூசியை ஆவது பெற்றுக் கொண்டுள்ளனர் எனவும் 3.9 வீத மக்கள் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டுள்ளனர் எனவும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த விகிதத்தில் தடுப்பூசிகள் தொடர்ந்து ஏற்றப்பட்டால் போதியளவு நோய் எதிர்ப்பு சக்தியை இலங்கை குடித்தொகை பெற்றுக் கொள்ள 80 வீத மக்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட வேண்டிய நிலையில் முதலாவது தடுப்பூசி ஏற்றி முடிக்க 3 வருடங்கள் எடுக்கும். அதுபோல இரண்டு ஊசிகளையும் ஏற்றி பூரணப்படுத்துவதற்கு 6 வருடங்கள் எடுக்கும் என்று எதிர்வு கூறும் கணிப்பீடுகள் காட்டுகின்றன.

பல நாடுகளில் அரசியல்வாதிகளின் தலையீடு எதுவும் இன்றி விரைவாக இந்த வருடத்துக்குள் தடுப்பூசி வழங்குவதற்கான திட்டங்கள் சுகாதாரத்துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஏனெனில் திரிவடைந்த கொரோனா வைரஸ்கள் புதிதாக உருவாகி வரும் நிலையில், அவற்றுக்கு எதிராக புதிய தடுப்பூசிகளை ஆண்டுதோறும் ஏற்றுவதற்கு இந்த நாடுகள் தயாராகி வரும் நிலையில், இலங்கையில் சுகாதாரத்துடன் தொடர்பில்லாத விளையாட்டு மற்றும் மீன்பிடி அமைச்சர்கள், ஆயுதப்படைத் தளபதிகள் சிறிதளவு தடுப்பூசி மருந்துகளை வைத்துக்கொண்டு அவற்றை மெதுவாக ஏற்றி நாட்டை காக்க முடியும் என்பது போல நகைச்சுவை நாடகங்களை நடத்தி தடுப்பூசி மருந்துகளுடன் படங்களை எடுத்து ஊடகங்களுக்கு வெளியிட்டுவருகிறார்கள்.

தடுப்பூசி மருந்தேற்றும் திட்டத்தில் உள்ள தாமதத்தினால் மக்கள் மனதில் ஏற்பட்டுள்ள பீதியை மூலதனமாக வைத்துக் கொண்டு மீண்டும் பல போலி மருந்துகள் சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளன. இவை எவையுமே கொரோனா நோயைக் குணப்படுத்தவோ அல்லது நோய்ப்பரவலை கட்டுப்படுத்தவோ முடியாதவை என்பதை சுகாதார அமைச்சருக்கு ஏற்பட்ட அனுபவத்தில் இருந்து அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். கொரோனா வராமல் இருப்பதற்கான தம்மிக்க பாணியை அருந்தி பிரபலப்படுத்திய அமைச்சர் கொரோனா நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு இருந்த விடயம் தொடர்பான ஆதாரங்கள் உள்ளன. எனவே போலி மருந்துகளை உள்ளெடுப்பதை விடுத்து சரியான முகமூடி அணிவது, சமூக இடைவெளியைப் பேணுவது, மற்றும் கைகளை சுத்தம் செய்வதே எங்களை காப்பாற்றும்.


And then she got Covid

BY ARJUNA RANAWANA
Wednesday January 27, 2021 10:23 am

ECONOMYNEXT - The government should be deeply ashamed by the fact that the so-called miracle cure for Covid produced by a Shaman assiduously trumpeted by its tame media and endorsed by the Minister of Health has failed spectacularly.


Health Minister admitted to IDH Intensive Care Unit for further treatment

Jan 29, Colombo: Sri Lanka's Health Minister Pavithra Wanniarachchi who was infected with the COVID-19 coronavirus has been transferred to the Intensive Care Unit of the Infectious Diseases Hospital for further treatment, local media reported.

---

## நேற்றைய வினாக்களுக்கான விடைகள்

**தரம் - 6** | **விஞ்ஞானம்** | **அலகு 05**

**01.**
- **i)** இல்லை
- **ii)** பார்வைக்கு கண் அவசியம்
- **iii)** பொருளைப் பார்ப்பதற்கு போதியளவு ஒளி இரவில் கிடைப்பதில்லை
- **iv)** ஒளியுள்ளமை
- **v)** ஒளி, கண்

**02.**
- **i)**
  - **a)** சக்தி
  - **b)** நேர்கோட்டு
  - **c)** சூரியன்
  - **d)** சூரியசக்தி
  - **e)** ஒளிமுதல்கள்
  - **f)** ஒளிராப் பொருட்கள்
  - **g)** சந்திரன்
- **ii)** சூரியன்
  சந்திரன்
- **iii)** மின் விளக்கு
  மண்ணெண்ணெய் விளக்கு
  மெழுகுதிரி
- **iv)** ஒளிரும் மின்குமிழ்
  ஒளிரும் விளக்கு
  மின்மினிப்பூச்சி
  ஒளிரும் காளான்
- **v)** ஒளிராப் பொருள்
  சந்திரனிலிருந்து ஒளி வெளிப்படுவதில்லை. சந்திரனின் மீது சூரிய ஒளி படுவதன் காரணமாக சந்திரன் ஒளிரும் பொருள் போல தென்படுகிறது.
- **vi)**


| ஒளிரும் பொருள் | ஒளிராப் பொருள் |
|---|---|
| சூரியன் | மேசை |
| மெழுகுதிரி | குடை |
| சந்திரன் | தாயக்கட்டை |
| மின்சூள் | |
| மின்குமிழ் | |

**03.**
- **i)**
  - **a)** ஒளி ஊடுகசியும் பொருள்
  - **b)** ஒளி ஊடு புகவிடாத பொருள்
- **ii)**

| ஒளிரும் ஊடு காட்டும் பொருள் | ஒளி ஊடு கசிய விடும் பொருள் | ஒளி ஊடுகடத்தாப் பொருள் |
|---|---|---|
| மெல்லிய கண்ணாடி | பூவேலையிடப்பட்ட கண்ணாடி | உலோகத்தகடு |
| தெளிந்தநீர் | எண்ணெய்தேய்க்கப்பட்ட கடதாசி | பலகை |
| நிறமற்ற பொலித்தீன் | | கறுப்பு கடதாசி |

- **iii)** ஒளியினளவை கட்டுப்படுத்த

**04.**
- I) உரு - I - ஒளிக்கதிர்
  உரு - II - ஒளிக்கற்றை
- II)




**05.**
- I)
  - b - ஒளிர்ப்புக்கு
  - c - மருத்துவ தேவைகளுக்கு
  - d - பொழுது போக்கிற்கு
  - e - சமிஞ்ஞைகள் உருவாக்குவதற்கு
- II)
  - a) (✓)
  - b) (✗)
  - c) (✓)
  - d) (✓)
- III)
  - a - என்டஸ்கோபி / அகங்காட்டி
  - b - மருத்துவ சோதனைகளுக்காக உடலில் உட்புற அங்கங்களை ஒளியூட்டுவதற்கு பயன்படும்.
  - c - இணைய வழித் தொடர்பு ஒளியூட்டல்
- IV)
  - a) தருணுக்கு
  - b) ஒளி நேர்கோட்டில் செல்லும் ஆகையால் உரு II இல் காட்டப்பட்டிருக்கும் குழாயினூடாக தென்படவில்லை.

செல்வி சுஜாதா வினாயகமூர்த்தி
கட்டுறுப்பயில்வு ஆசிரியை (கிளி/ பளை மத்திய கல்லூரி)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

வழிகாட்டலும் ஆலோசனையும் :- திரு.பிரான்சிஸ் தோமஸ் எடிசன்
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

காலைக்கதிர் Kalaikkathir

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 8** | **விஞ்ஞானம்** | **அலகு 08**

### 01. சடப்பொருளில் ஏற்படும் மாற்றங்கள்

* சூழலினை சடப்பொருள், சக்தி என பிரிக்கலாம் என 4ஆம் அலகில் கற்றுள்ளோம்.
* எம் அன்றாட வாழ்வில் காய் பழமாதல், பனிக்கட்டி உருகுதல், நீர் ஆவியாதல் குப்பைகள் பிரிந்தழிவிற்கு உட்படல்(உக்கலடைதல்), விறகு எரிந்து சாம்பலாதல் போன்ற பல்வேறு மாற்றங்களை அவதானித்துள்ளோம்.
* அதில் கடதாசி ஒன்றை சிறுதுண்டுகளாக கிழிப்போம், இன்னோர் கடதாசி துண்டினை எரிப்போம். இரு வகையான சந்தர்ப்பங்களிலும் வெவ்வேறான மாற்றம் ஏற்படுகிறது.
* கடதாசியை கிழித்த போது கடதாசியின் தன்மையிலோ / அதில் அடங்கியுள்ள கூறுகளிலோ மாற்றங்கள் ஏற்படவில்லை. ஆனால் கடதாசியை எரித்த போது கடதாசியிலிருந்த வேறுபட்ட சாம்பல் என்னும் பதார்த்தம் புதிதாகத் தோன்றியுள்ளது.

### 01. பௌதிக மாற்றங்களும் இரசாயன மாற்றங்களும்

1.பௌதிக மாற்றம் என்றால் என்ன?

2. இரசாயன மாற்றம் என்றால் என்ன?

3. உப்பானது நீரில் கரையும் போது ஏற்படும் மாற்றம் யாது?

4.உப்பானது நீரில் கரைதல் ஒரு பௌதீக மாற்றம் என்பதற்கான சான்று யாது?

5.சுத்தமாக்கப்பட்ட மக்னீசிய நாடாவின் தகனத்தின் போது (எரிக்கும் போது) உமது அவதானம் யாது?

6.இரசாயன மாற்றங்களுக்கு ஐந்து உதாரணங்கள் தருக?

7.பௌதீக மாற்றங்களுக்கு ஐந்து உதாரணங்கள் தருக?

### 02. நிலைமாற்றம் பௌதிக மாற்றமாகும்.

* அன்றாட வாழ்வில் பனிக்கட்டி உருகுதல், நீர் ஆவியாதல் ஆகிய செயற்பாடுகள் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள் அவ்வாறு சடப்பொருளின் ஏதாவது ஒரு பௌதிக நிலையிலிருந்து இன்னோர் பௌதிக நிலைக்கு மாறும் செயற்பாடு நிலைமாற்றமாகும்.

1.உருகுதல் என்றால் என்ன?

2.உறைதல் என்றால் என்ன?

3.ஒடுங்குதல் என்றால் என்ன?


4.ஆவியாதல் என்றால் என்ன?

5.பதங்கமாதல் என்றால் என்ன?

6.நிலைமாற்றம் எனப்படுவது யாது?

7.நிலைமாற்றம் ஓர் பௌதீக மாற்றமாகக் கருதப்படுவதன் காரணம் யாது?

8. கீழுள்ள வரிப்படத்தைப் பூர்த்தி செய்க




### 03. இரசாயன மாற்றங்கள்

* **இரசாயன மாற்றங்கள் ஏற்படும் போது புதிய பதார்த்தங்கள் தோன்றும்.**
* **இரசாயன மாற்றங்களை இரசாயன தாக்கங்கள் எனவும் கூறலாம்.**
* **இரசாயன தாக்கத்தில் பங்குபற்றும் பதார்த்தங்கள் தாக்கிகள் எனவும், தோன்றும் புதிய பதார்த்தங்கள் விளைவுகள் எனவும் அழைக்கப்படும்.**

1.ஈய நைத்திரேற்றின் நிறம் யாது?

2. ஈய நைத்திரேற்றினை வெப்பப்படுத்தும் போது ஏற்படும் இரண்டு அவதானங்களைக் குறிப்பிடுக?

3.நீரற்ற செப்புசல்பேற்றின் நிறம் யாது?

4.நீரில் கரைக்கப்பட்ட செப்புசல்பேற்றின் நிறம் யாது?

5. செப்புசல்பேற்று கரைசலினுள் தூய்மையாக்கப்பட்ட இரும்பாணியை இடும் போது அவதானம் யாது?

1 - ..............................
2 - ..............................
3 - ..............................

6.சோடியம் ஐதரொட்சைட் கரைசலிற்கு செப்புசல்பேற் கரைசலினை சேர்க்கும் போது அவதானம் யாது?

7.ஐதரோகுளோரிக்கமிலத்தினுள் நாகத்துண்டை(உலோகம்) இடும் போது அவதானம் யாது?

.............................. , ..............................

8.இரசாயனத் தாக்கம் நடைபெற்றமைக்கான சான்றுகள் ஆறு தருக?

.............. , .............. , .............. ,
.............. , .............. , ..............

9.தாக்கிகள் என்றால் என்ன?

10.விளைவுகள் என்றால் என்ன?

11.பின்வரும் இரசாயனத் தாக்கங்களில் தாக்கிகள், விளைவுகளை இனங்காண்க?

A) மக்னீசியம் + ஒட்சிசன் ⟶ மக்னீசியம் ஒட்சைட்
B) காபனீரொட்சைட் + நீர் ⟶ குளுக்கோஸ் + ஒட்சிசன்
C) சோடியம் ஐதரொட்சைட் + ஐதரோகுளோரிக் அமிலம் ⟶ சோடியம் குளோரைட் + நீர்

| சமன்பாடு | தாக்கிகள் | விளைவுகள் |
|---|---|---|
| A | | |
| B | | |
| C | | |

12. இரசாயனத் தாக்கங்களுக்கு ஐந்து உதாரணங்கள் தருக?


### 04. திணிவுக்காப்பு விதி

* அன்டனி லாவோசியர் என்னும் பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானி திணிவுக்காப்பு விதியை முன்வைத்தார்.

1.திறந்த தொகுதி என்றால் என்ன?

2.மூடிய தொகுதி என்றால் என்ன?

3.படத்தில் காட்டியவாறு கொதி குழாயினுள் தீக்குச்சிகளை இட்டு அதன் வாயை மூடிக்கட்டி தீக்குச்சியை எரிக்கும் போது உமது அவதானம் யாது?




4.திணிவுக்காப்பு விதியை எழுதுக?

5.திணிவுக்காப்பு விதியை முன்வைத்த விஞ்ஞானி யார்?

### 05. தகனம்

* நாம் அன்றாட வாழ்வில் சில பொருட்கள் தகனிக்கக் கூடியதாக இருப்பதையும், சில பொருட்கள் எவ்வளவு வெப்பத்தை கொடுத்தாலும் தகனிக்க முடியாதவையாகக் காணப்படும்.
* தகனிக்கக் கூடிய பொருட்களிலும் விரைவாக தீப்பற்ற கூடிய பொருட்களையும் நாம் அவதானித்திருக்க முடியும்.

1.தகனத் துணையி என்றால் என்ன?

2.தகனத் துணையி வாயு எது?

3.தகனிக்கத்தக்க பொருள் என்றால் என்ன?

4.தகனிக்கத்தக்க பொருட்களுக்கு உதாரணங்கள் தருக?

**9 ஆம் பக்கம் பார்க்க...**

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 8** | **விஞ்ஞானம்** | **அலகு 08**

**(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

5.தகனிக்கத்தகாத பொருள் என்றால் என்ன?

.................................................................................................

6.தகனிக்கத்தகாத பொருட்களுக்கு உதாரணங்கள் தருக?

.................................................................................................

7.தகனம் என்றால் என்ன?

.................................................................................................

8.எரிபற்றுநிலை என்றால் என்ன?

.................................................................................................

9.எரிபற்றுநிலை குறைந்த பொருட்கள் என்றால் என்ன?

.................................................................................................

10. தகனத்திற்கு தேவையான காரணிகள் எவை?
1 - .................................................................................
2 - .................................................................................
3 - .................................................................................

**06.தீ முக்கோணி**



* தீ ஏற்படுவதற்கு தேவையான காரணிகளைத் தொடர்புபடுத்தி வரையப்பட்ட அமைப்பு தீ முக்கோணி எனப்படும்.

1.தீ விபத்து ஒன்று ஏற்படும் போது தீயை அணைக்க வேண்டுமாயின் என்ன செய்ய வேண்டும்?

.................................................................................................

2.தீ முக்கோணி என்றால் என்ன?

.................................................................................................

3.தீயை அணைப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் எவை?
1 - .................................................................................
2 - .................................................................................
3 - .................................................................................

4.வீடுகளில் ஏற்படும் தீயை எவ்வாறு அணைப்பீர்?

.................................................................................................

5.நெருப்புத்தணலின் மீது நீரைத் தெளிக்கும் போது அணைவதற்கான காரணம் யாது?

.................................................................................................

6.அணிந்திருக்கும் ஆடையில் தீப்பற்றினால் நிலத்தில் புரள்வதற்கான காரணம் யாது?

.................................................................................................

7.அணிந்திருக்கும் ஆடையில் தீப்பற்றுமாயின் ஓடக்கூடாது. இதற்கான காரணம் யாது?

.................................................................................................

8.எவ்வகையான தீயை அணைக்க நீரைப் பயன்படுத்த முடியாது?

.................................................................................................

**07.எரிபொருட்கள்**

1. எரிபொருள் என்றால் என்ன?

.................................................................................................


2.பின்வரும் எரிபொருட்களுக்கு உதாரணங்கள் தருக?

| திண்ம எரிபொருள்கள் | திரவ எரிபொருள்கள் | வாயு எரிபொருள்கள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

3.எல்லா எரிபொருட்களிலும் எம் மூலகங்கள் அடங்கியுள்ளன?

.................................................................................................

4.எரிபொருள் தகனமடையும் போது உருவாகும் விளைவுகளை பரிசோதிப்பதற்கான பரிசோதனை அமைப்பு உருவில் காட்டப்பட்டுள்ளது.




a - எரிபொருள் தகனமடையும் போது உருவாகும் விளைவுகள் எவை?

.................................................................................

b - அவ்விளைவுகளை எவ்வாறு உறுதிப்படுத்துவீர்?

காபனீரொட்சைட் வாயு - .................................................................................

நீர் -

c - இங்கு u வடிவக்குழாயினை ஏன் நீரினுள் வைக்கப்பட்டுள்ளது?

.................................................................................................

d - வளி உறிஞ்சப்படும் பம்பி பொருத்தப்பட்டுள்ளதன் காரணம் யாது?


.................................................................................................


**08.எரிபொருள்களில் நிகழும் நிறை தகனமும் குறை தகனமும்**

1.கீழுள்ள அட்டவணையின் மிகுதி இடைவெளிகளைப் பூரணப்படுத்துக

| | குறை தகனம் | நிறை தகனமும் |
|---|---|---|
| ஒட்சிசன் | 1- ............................................ | போதுமான அளவு கிடைக்கும் போது |
| விளைவு | காபனீரொட்சைட்டு, நீர், காபனோரொட்சைட்டு, எரியாத காபன் துணிக்கை | 2 - .................................. |
| வெப்பம் | 3............................................ | அதிகம் |
| உதாரணம் | மெழுகுவர்த்திச் சுவாலை | 4-.................................. |

2.பின்வரும் சுவாலைகளின் வலயங்களினைப் பெயரிடுக




**09. உலோகம் மங்குதலடைதல்**

1.உலோகம் மங்குதலடைதல் என்றால் என்ன?

.................................................................................................

2.இரும்பு மங்குதலடைவதால் உருவாகும் செந்நிறம் சார்ந்த கபிலநிறப் பதார்த்தம் எவ்வாறு அழைக்கப்படும்?

.................................................................................................

3.இரும்பு மங்குதலடைதல் எவ்வாறு அழைக்கப்படும்?

.................................................................................................

4.உலோக அரிப்பு என்றால் என்ன?

.................................................................................................

5.உலோகம் மங்குதல், இரும்பு துருப்பிடித்தல் என்பன எவ்வகைத் தாக்கம்/ மாற்றம்?


.................................................................................................

**10.இரும்பு துருப்பிடித்தல்**

* அன்றாடம் பயன்படுத்தும் இரும்பு பொருட்களான கத்தி, யன்னல் கம்பி, கிணற்றில் நீர் அள்ளும் வாளி என்பன துருப்பிடித்திருப்பதை அவதானித்திருப்பீர்கள்.
* அதற்கு வளியில் உள்ள ஒட்சிசன், நீர்/ நீராவி ஆகிய 2 காரணிகளும் கிடைக்கும் போதே துருப்பிடித்தல் நடைபெறுகிறது.
* கடற்கரைச் சார்ந்த இடங்களில் காணப்படும் இரும்புப் பொருட்களில் அதி களவாக துருப்பிடிப்பதையும் அவதானித்து இருப்பீர்கள்.
* துருப்பிடித்தலைத் தடுப்பதற்கு தீந்தை, கிறீஸ் பூசுதல், கல்வனைசுப்படுத்தல் மூலம் இரும்பைத் துருப்பிடித்தலில் இருந்து பாதுகாக்கின்றோம்.

**1.இரும்பு துருப்பிடித்தலுக்கு வளி அவசியம் எனக்காட்டல்.**

* இரும்புதுருப்பிடித்தலிற்கு அவசியமான காரணியில் ஒன்றை காட்டுவதற்கான தொகுதி A, தொகுதி B,தொகுதி C, எனும் 3 பரிசோதனை அமைப்புக்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளன.




1.இங்கு தயாரிக்கப்பட்ட பரிசோதனையின் நோக்கம் யாது?

.................................................................................

2.இங்கு எவ் அமைப்பு துருப்பிடித்துக் காணப்படாது?

.................................................................................

3.இத்தொகுதி துருப்பிடிக்காமைக்கான காரணம் யாது?

.................................................................................................

4.தொகுதி A யில் கொதித்தாறிய நீர் உபயோகித்ததன் காரணம் யாது?

.................................................................................................

5.இங்கு நீரின் மீது எண்ணைப் படலம் இட்டமைக்கு காரணம் யாது?

.................................................................................................

**(10 ஆம் பக்கம் பார்க்க)**

காலைக்கதிர் Kalaikkathir

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 8** | **விஞ்ஞானம்** | **அலகு 08**

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

6.இங்கு எவ் அமைப்புக்கள் துருப்பிடித்துக் காணப்பட்டன?

..........................................................................................

7.இத்தொகுதிகள் துருப்பிடித்தமைக்கான காரணம் யாது?

..........................................................................................

8.தொகுதி A,B என்பன வளியை எங்கிருந்து பெற்றுக் கொள்கின்றன?

தொகுதி A – ..........................................................................


தொகுதி B – ..........................................................................

9.இப் பரிசோதனையின் அவதானத்தின் மூலம் என்ன முடிவிற்கு வருவீர்?

..........................................................................................

**2.இரும்பு துருப்பிடித்தலுக்கு நீராவி அவசியம் எனக்காட்டல்.**

✻இரும்பு துருப்பிடித்தலிற்கு அவசியமான காரணி ஒன்றினை அறிவதற்கான பரிசோதனை அமைப்பு படத்தில் காட்டப்பட்டுள்ளது. இப் பரிசோதனை அமைப்பை ஒழுங்கு செய்து சில நாட்களின் பின்னர் அவதானிப்பு பெறப்பட்டது.



1. இங்கு எங்கு துருப்பிடித்தல் நடைபெற்றுள்ளது?

..........................................................................

2. இங்கு எங்கு துருப்பிடித்தல் நடைபெறவில்லை?

..........................................................................

3.பரிசோதனைக்குழாயினுள் கல்சியம் குளோரைட்டுப் பளிங்குகள் இடப்பட்டமைக் கான காரணம் யாது?

..........................................................................................

4.தக்கையைச் சூழ மெழுகிடப்பட்டிருப்பதன் காரணம் யாது?

..........................................................................................

5.குழாயினுள்ளே காணப்படும் இரும்பாணியின் பகுதிகள் துருப்பிடிக்காமைக் கான காரணம் யாது?

..........................................................................................

6.தக்கையின் இருபுறமும் இருக்குமாறு இரும்பாணிகள் பொருத்தப்பட்டுள்ளதன் காரணம் யாது?

..........................................................................................


7.இப் பரிசோதனையின் அவதானத்தின் மூலம் என்ன முடிவிற்கு வருவீர்?

..........................................................................................

**3.இரும்பு துருப்பிடித்தலுக்கு வளியிலுள்ள ஒட்சிசன் அவசியம் எனக்காட்டல்.**

✻ வளியில் ஒன்றிற்கு மேற்பட்ட வாயுக்கள் காணப்படுகின்றன

துருப்பிடித்தலிற்கு வளியிலுள்ள எவ்வாயு மூலக்கூறு அவசியம் என்பதை அறிவதற்காக பரிசோதனை தொகுதி தயாரிக்கப்பட்டுள்ளது.




1.குழாய் Bயில் உமது அவதானங்கள் யாவை?

1 – ..........................................................

2 – ..........................................................

2.வளிமண்டலத்தில் ஒட்சிசனின் அளவு யாது?

...........சதவீதம் (...........பகுதி)

3.குழாய் B யில் எவ்வளவு பங்கு உயரத்திற்கு நீர் உயர்ந்துள்ளது?

..........................................................

4.இப் பரிசோதனையின் அவதானத்தின் மூலம் என்ன முடிவிற்கு வருவீர்?

..........................................................................................

5.இம் முடிவிற்கான காரணம் யாது?

..........................................................................................

6.இரும்பு துருப்பிடித்தலுக்கு அவசியமான காரணிகள் எவை?

..........................................................................................

**4.இரும்பு துருப்பிடித்தலிலிருந்து பாதுகாத்தல்**

1.இரும்பு துருப்பிடித்தலை எவ்வாறு தடுக்க முடியும்?

..........................................................................................

2.இரும்பு துருப்பிடித்தலை தடுப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய வழி வகைகள் 4 தருக

..........................................................................................

3.கல்வனைசுப்படுத்தப்பட்ட பொருட்கள் என்றால் என்ன?

..........................................................................................

4.கல்வனைசுப்படுத்தல் இரும்பு துருப்பிடித்தலை தடுப்பதற்கான சிறந்த முறை எனப்படுவதன் காரணம் யாது?

..........................................................................................

5.தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், பால்மா போன்றவற்றை வாங்கும் போது பேணிகளில் கீறல் ஏற்பட்டுள்ளதா என ஏன் கவனத்தில் கொள்ள வேண்டும்?


..........................................................................................

**11.நடுநிலையாக்கம்**

✻மூலத்திற்கு அமிலம் சேர்க்கும் போது / அமிலத்திற்கு மூலம் சேர்க்கும் போது அவற்றின் அமில, மூல இயல்புகள் படிப்படியாகக் குறைந்து ஒரு சந்தர்ப்பத்தில் அமில, மூல இயல்புகள் முற்றாக நீங்கும் செயன்முறை நடுநிலையாக்கம் எனப்படும்.

✻இதனை **அமிலம் மூலம் ⟶ நடுநிலைப் பதார்த்தங்கள்** என்னும் பொது சமன்பாட்டின் மூலம் குறித்துக் காட்ட முடியும்.

அமில, மூல, நடுநிலைக்கரைசலை இனங்காண்பதற்கு தேவையான பரிசோதனை அமைப்புக் காட்டப்பட்டுள்ளது. பரிசோதனை குழாய் Aயில் ஐதரோகுளோரிக் அமிலக் கரைசலும், பரிசோதனை குழாய் Bயில் சோடியம் ஐதரொட்சைட் கரைசலும், பரிசோதனை குழாய் C யில் சோடியம் குளோரைட் கரைசல் (கறியுப்பு) என்பன எடுக்கப்பட்டுள்ளது.




1.பரிசோதனை அமைப்பிலுள்ள ஆய்வுகூட உபகரணங்களை எழுதுக

2.சோடியமைதரொட்சைட் கரைசல், ஐதரோகுளோரிக் அமிலக் கரைசல், சோடியம் குளோரைட் கரைசல் என்பவற்றிற்கு காட்டிகளை தனித்தனியே இட்டு அவதானிக்கும் போது ஏற்படும் நிறமாற்றங்களை அட்டவணையின் இடைவெளிகளில் நிரப்புக.

| காட்டி | ஐதரோகுளோரிக் அமிலக் கரைசல் | சோடியம் ஐதரொட்சைட் கரைசல் | சோடியம் குளோரைட் கரைசல் |
|---|---|---|---|
| செம்பாசிச்சாயத்தாள் | நிறமாற்றம் இல்லை | 1 –.................... | நிறமாற்றம் இல்லை |
| நீலப்பாசிச்சாயத்தாள் | 2 –.................... | நிறமாற்றம் இல்லை | 3– .................... |
| pH தாள் | 7ஐ விட குறைந்த பெறுமானம் | 4– .................... .................... | 5– .................... .................... |
| பினோப்தலின் | நிறமாற்றம் இல்லை | 6–.................... | 7– .................... |

3.அவதானிப்புக்களின் அடிப்படையில் கீழ்வரும் கரைசல்கள் அமிலம்/ மூலம் நடுநிலை எனக் குறிப்பிடுக

1. சோடியம் ஐதரொட்சைட் கரைசல் – ..........................................
2. ஐதரோகுளோரிக் அமிலக் கரைசல் – ..........................................
3. சோடியம் குளோரைட் கரைசல் – ..........................................

**12.மூலத்துடன் அமிலத்தைச் சேர்ப்பதால் ஏற்படும் மாற்றங்களை அவதானித்தல்**

1.இப் பரிசோதனைக்கு தேவையான ஆய்வுகூட உபகரணங்களை இனங்காண்க.



a - ..............................



b - ..............................

2.முகவை ஒன்றில் 10ml சோடியமைதரொட்சைட் கரைசல் எடுத்து சிலதுளி/ பினோப்தலின் துளிகள் சேர்க்கும் போது உமது அவதானம் யாது?

..........................................................................................

3.அந்நிறமாற்றத்திற்கு காரணம் யாது? .

..........................................................................................

4.சிலதுளி பினோப்தலின் சேர்க்கப்பட்ட சோடியமைதரொட்சைட் கரைசலினுள் குழாயியின் உதவியுடன் ஐதான ஐதரோகுளோரிக் அமிலத்தை சிறிது சிறிதாக சேர்க்கும் போது உமது அவதானம் யாது?

..........................................................................................

5.அந்நிறமாற்றத்திற்கான காரணம் யாது?

..........................................................................................

6.மேலும் அமிலத்தை சேர்க்கையில் ஒரு நிலையில் முற்றாக நிறமற்றதாக மாறுவதற்கு காரணம் யாது?

..........................................................................................

7.மேற்படி இப்பரிசோதனை எவ்வாறு அழைக்கப்படும்?

..........................................................................................

8.நடுநிலையாக்கற் செயன்முறை என்றால் என்ன?

..........................................................................................

9.மேற்படி பரிசோதனையில் உருவாகும் நடுநிலை பதார்த்தங்கள் எவை?

..........................................................................................

10.இவ்வாறு அமில, மூலங்களுக்கிடையில் நடைபெறும் இரசாயன மாற்றம் எவ்வாறு அழைக்கப்படும்?

..........................................................................................

11.இங்கு நடைபெறும் தாக்கத்திற்கான சொற்சமன்பாட்டை பூரணப்படுத்துக

சோடியம் ஐதரொட்சைட் + ............................ ⟶ .................... + நீர்

12.அன்றாட வாழ்வில் நடைபெறும் நடுநிலையாக்கல் தாக்கங்களிற்கான உதாரணங்கள் 4 தருக.

..........................................................................................

13.விவசாய நிலங்களில் மண்ணின் அமிலத் தன்மையை நீக்க பயன்படுவது எது?

..........................................................................................

**ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யா/செங்குந்த இந்துக் கல்லூரி)**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர்**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

**இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.**

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாவுக்கு எதிரான போராட்டம்

## ஓர் அனுபவத் தொடர்

அங்கம் 8

எந்திரி நவரட்னம் சுதாகரன்
பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர்,
முல்லைத்தீவு பிராந்தியம்.

### கொரோனாத் தனிமைப்படுத்த நிலையத்தில் நான்

2021 மே 27 அன்று மதியம் பிற்பகல் 01 மணியளவில் நோயாளர்காவு வண்டி மூலம் என்னைக் கோப்பாய் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அவ்வாகனத்தில் மேலும் 05 நபர்கள் என்னுடன் வந்தனர். வாகனத்தினுள் தனிமனித இடைவெளி பேணப்பட்டு இருந்தது. நாங்கள் அனைவரும் கோப்பாய் தனிமைப்படுத்தல் நிலையத்திற்குச் சென்றோம். உள்ளே நுழைந்ததும் ஒரு விதமான பதற்றம் மனதிலே தோன்றியது. அங்கிருந்தவர்கள் எமது புதிய வருகையினை தூர நின்று அன்புடன் வரவேற்றனர். அவர்களிடத்தில் நிறைய ஏக்கம் இருந்ததை என்னால் உணர முடிந்தது.

முதலாவதாக எங்களது வரவினை பதிவு செய்வதற்காக முன்முகப்பில் (Main Entrance) மேசை (Registration Desk) இருந்தது. எங்களுக்காக ஒரு இலக்கச் சிட்டை தரப்பட்டது.

பதிவின் பின்னர் நாமாகவே கேட்டுச் கேட்டு சென்று கண்ணாடியினால் முழுமையாக அடைக்கப்பட்ட ஒரு அறைக்கு (Nursing Station - Male) உள்ளே கண்ணாடிக்கு அடுத்த பக்கம் தாதியர்கள் இருந்து தொலைபேசி மூலமாக எமது விவரங்களினைக் கேட்டு



பதிவு செய்து கொண்டனர். எங்களது உடல் நிலையினை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட கொரோனா தொற்றாளர் ஒருவர் மூலம் (இரத்தம் மற்றும் குருதி அழுத்தம்) சோதனை செய்து தாதியர்களுக்கு தெரிவித்தார்.

அதன் பிறகு எமக்கு, தங்குமிடத்துக்குச் செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. கல்வி மற்றும் தொழில் சார்ந்து பல நாடுகளுக்கு விஜயம் செய்திருந்தேன். இலங்கையின் பல பாகங்களுக்கும் பயணம் செய்திருக்கிறேன். எனினும் அந்த கொரோனாத் தனிமைப்படுத்தல் மையத்திற்குள் எங்கு செல்வது, எப்படி செல்வது எனத் தெரியாமல் தடுமாறியவனாக நின்றேன். அதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் மிக முக்கியமாக நான் ஒரு கொரோனாத் தொற்றாளன் என்ற மன உளைச்சல், எவ்வாறு தனிமைப்படுத்தல் காலத்தை கழிக்க போகிறேன் என்ற ஏக்கம் என்பன தடுமாற்றத்தை தந்திருந்தது. எனினும் ஏலவே தொற்றாளியாக நின்ற ஒருவரை அணுகி எவ்வாறு செல்ல வேண்டும் என வினவித் தெரிந்து கொண்டு நடக்கத் தொடங்கினேன். இந்நிலைமை ஏனைய நலிவுற்ற நோயாளிகளுக்கு மிகவும் சிரமத்தை ஏற்படுத்தும் என எண்ணியபடி நடந்து சென்றேன். நான் போய்க் கொண்டிருக்கும் போதே, அறிமுகமே இல்லாத ஒருவர் என்னை அழைத்து தன்னுடன் அவரது C2 BLOCK பகுதியில் உள்ள அறையில் தங்க வருமாறு கோரியிருந்தார். அங்கு நோயாளிகள் தங்குவதற்கு வசதியாக C1,C2,B1,B2 என ஆண்கள் தங்குவதற்கான இடமும் A Block முழுவதும் பெண்கள் தங்கக்கூடிய ஏற்பாடுகளும் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தமையை பின்னர் அறிந்து கொண்டேன். அவரின் அன்பு அழைப்பை ஏற்று அவருடன் தங்க அவரின் அறை C2 (Room 3) இற்குச் சென்றேன்.

ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துகொண்டு, அன்னியோன்னியமாகக் கதைத்துக் கொண்டோம். அவருடைய கதை என்னை விட சோகமானது. அவர் வங்கி ஒன்றின் முகாமையாளராகக் கடமையாற்றுகிறார் எனவும் தன்னுடைய மனைவி கடமையாற்றும் காப்புறுதிநிறுவனத்தில் ஏற்பட்ட கொத்தணியின் பிரகாரம் தனது குடும்பத்தில் அனைவருக்கும் தொற்று ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தன்னுடைய கதையினைப் பகிர்ந்து கொண்டார்.

நான் கொண்டு சென்ற பொருள்களினை வெறுமையாக இருந்த கட்டிலின் மீது வைத்துவிட்டு ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துகொண்டோம். புதிதாக வந்தவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த Soap, Brush, Toothpaste, Bed Sheet, Washing Powder,Cup CUITOTM அத்தியாவசியப் பொருள்களினை எனக்கு தந்தார்கள்.

எனது அறையில் பொருள்களை ஒழுங்கமைத்து வைத்து கட்டிலினையும் சீர்படுத்தி முடித்ததும் நேரமும் மாலை ஆனது. புதிதாக அறிமுகமான எனது நண்பருடன் தனிமைப்படுத்தல் வளாகத்தினைச் சுற்றிப் பார்க்கச் சென்றேன். சுற்றுப்புறம் சுத்தமாக பேணப்பட்டுள்ளமையுடன் நோயாளர்களுக்கேற்ற வகையில் வசதிகள் அமையப்பெற்று காணப்பட்டன.

### தனிமைப்படுத்தல் நிலைய மருத்துவப் பரிசோதனைகள் - Medical Checkups


கோப்பாய் தனிமைப்படுத்தல் நிலையத்தில் பணியாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள், நாம் கோரும் உதவிகளை மனம் கோணாது செய்து வந்தனர். விசேடமாக தனிமைப்படுத்தல் மையத்தில் செயற்பாடுகள் சிலவற்றில் தெளிவின்மை காணப்படும் போதெல்லாம் பணிவாக விளக்கமளித்தார்கள். ஏதேனும் ஒரு நோயாளிக்கு அவசர சிகிச்சைக்கான தேவை ஏற்படின் அதற்கான வசதிளும் அங்கு மேற்கொள்ளப்பட்டிருந்தன. அத்துடன் விசேடமாக சிகிச்சைக்காக தனி அறையும் பேணப்பட்டிருந்தது. சுழற்சி முறையில் ஒரு வைத்தியர் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்தார்.







அத்துடன் ஒவ்வொரு நாளும் ஒரு மருத்துவர்/ தாதியர் உதவியாளர் தனிமைப்படுத்தப்பட்ட இடங்களைக் கண்காணித்து வருகின்றார்கள். இங்கு தங்க வைக்கப்படுபவர்கள் கூடிய வகையில் Asymptomatic / Mild patient ஆக இருப்பதால் நோயாளிகளை Isolation இல் வைத்திருப்பது அவர்களது பிரதான விடயமாகக் காணப்பட்டது. எனினும், நோயாளி அடுத்த நிலைக்கு மாறுவார் எனக்கருதினால் உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பக் கூடிய வகையில் வைத்திருக்கிறார்கள். ஆனால் தற்காலிகமாக பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட Covid 19 Treatment center வைத்தியசாலையினைப் போன்று செயற்பட வேண்டும் என்ற சிலர் எண்ணலாம் ஆனால் அவ்வாறு செயற்பட , சுகாதாரத் துறையின் ஆளணி, பௌதீக வளம் என்பன பற்றாக்குறையில் இருக்கும் போது, அந்த எதிர்பார்ப்பை முழுமைப்படுத்த முடியாது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். குறிப்பாக DDH/MSI/23/2020ஆம் இலக்க 12.05.2020 ஆம் திகதிய DH - Health அவர்களின் சுற்றுநிருபத்திற்கு அமைய செயற்படாத நிலையிலும், அதற்கான குறைந்தளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமையை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.





### கோப்பாய் தனிமைப்படுத்தல் நிலைய உணவு - Meals

இந்த நிலையத்தில் வீட்டைப்போல அல்லது வேறு தனியார் வைத்தியசாலையில் வழங்கப்படும் உணவுகளைப் போல வழங்கப்பட முடியாது என்பதை தொற்றாளர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். எனினும் அரசாங்க சுற்றுநிருபங்கள் மற்றும் வரையறைகளுக்கேற்ப உணவு வழங்கப்படுகின்றது என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. காலையில் 7.00 மணியளவில் தேநீர், காலை உணவு வழங்கப்பட்டது. மாலை 4.00 மணிக்கு சுவையான தேநீர் வழங்கப்பட்டது. மாலை 5.30 மணிக்கு மல்லித் தண்ணீர் வழங்கப்பட்டது. இரவு 7.00 மணிக்கு பொதி செய்யப்பட்ட உணவு வழங்கப்பட்டது. வழங்கப்படும் உணவு மற்றும் பானங்கள் உடல் ஆரோக்கியத்தினை வலிமைப்படுத்தக்கூடிய தன்மையிலேயே வழங்கப்பட்டன. மதிய உணவில் உடலுக்கு ஆரோக்கியத்தினை வழங்கும் உணவு வகைகளே சேர்க்கப்பட்டிருந்தன. அதனுடன் ஒரு வாழைப்பழமும் வழங்கப்பட்டது. பெரும்பாலும் 03 வேளைகளும் உணவாக சோறு வழங்கப்பட்டது இது வடபகுதியின் உணவுப் பழக்க வழக்கத்திற்கு சற்று மாறுதல் என்பதால் விமரச்சனங்கள் எழுந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. சில வேளைகளில் பாண் வழங்கப்பட்டிருந்தது. இங்கு தங்கும் காலம் கூடியளவு 2 தொடக்கம் 8 நாள்கள் ஆகும். இந்நிலையில் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் வழங்கப்படும் உணவு பெரியளவில் குறை கூறும் அளவிற்கு இல்லை என்பது எனது கணிப்பு.

### கோப்பாய் தனிமைப்படுத்தல் நிலையத்தின் சுகாதார நடைமுறைகள் - SANITORY FACILITIES

இங்கு தங்க வைக்கப்படுபவர்களில் வெவ்வேறு நிலையிலுள்ள கொரோனாத் தொற்றாளர்கள் மற்றும் ஏனைய தொற்றாநோய்கள் உள்ளவர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள். இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதுவிடின் கொரோனா போன்ற வேறு வகை வீரியமான வைரஸ்கள் பரவி நோயை ஏற்படுத்தக்கூடும். அதைவிட வயிற்றோட்டம் போன்ற நீர்ப்பீடன நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகவே இந்த விடயங்கள் தொடர்பாக சுகாதார அமைச்சுவழிகாட்டிகளைவைத்தியத்துறையினருக்கு அனுப்பி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்திய வண்ணம் உள்ளனர். எனினும் இதனை அங்கிருக்கும் (தனிமைப்படுத்தல் நிலைய) சூழ்நிலையில் செயற்படுத்துவது மிகவும் கடினமான விடயம். எனவே, சுகாதாரத் தொழிலாளர்கள் மூலம் அவர்களுக்கான வழிகாட்டுதலின் பிரகாரம் மிகச் சிரமத்திற்கு மத்தியிலேயே அப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தனிமைப்படுத்தல் மையத்தில் உள்ள குளியலறைகள், மலசல கூடம் அனைத்தும் சுகாதார வழிகாட்டுதலின்படி சுத்தப்படுத்தப்படுகின்றன. இவற்றுக்கிடையில் அங்கு அனுமதிக்கப்பட்டவர்கள் சுகாதார நடைமுறைகளினைப்பின்பற்றுகின்றார்களா என்பதனையும் சில அதிகாரிகள் கவனித்துக்கொண்டிருந்தனர்.

தொடரும்

காலைக்கதிர்
Kalaikkathir




# பாட்டும் நானே? பாவமும் நானே!

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.**

**1. கேள்வி:-** எங்கே உங்களின் எதிரி, முன்னாள் முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரனுடைய சத்தத்தை இப்போதெல்லாம் அதிகம் காணமுடிவதில்லையே. என்ன காரணம்? (தேர்தல் காலத்தில் அவர் நம் இனத்தின் உரிமை பற்றி அளவுக்கதிகமாகப் பேசியதால்த்தான் இக் கேள்வி.)

**பதில் :-** என்ன? எனக்கு வால்முறுக்கிவிடப் பார்க்கிறீர்களா? இந்த நாரதர் வேலைதானே வேண்டாம் என்கிறது. முதலில் உங்கள் கேள்வியில் இருக்கும் ஒருபெரிய பிழையைத் திருத்திக்கொள்ளுங்கள். மு.முதலமைச்சர் ஒருக்காலும் என் எதிரி அல்லர். இன்றும் அவர் என் நண்பர்தான். நான் எதிர்ப்பது அவரை அல்ல. அவரது பிழையான சமூகச் செயற்பாடுகளையே.

இனி உங்கள் கேள்விக்கு வருகிறேன். தன்நோக்



கத்தை நிறைவேற்றத்தானே அவர் அதிகம் பேசினார். இன்று அவரது நோக்கம் நிறைவேறிவிட்டது. இனி ஏன் அவர் அதிகம் பேசவேண்டும் என்று கேட்கிறேன்? 'என்னது நம் இனத்திற்கு விடுதலை கிடைத்துவிட்டதா' என்று கேட்கிறீர்களா? அவரது நோக்கம் நிறைவேறிவிட்டது என்று சொன்னேனே தவிர, அவரது நோக்கம் இனவிடுதலைதான் என்று நான் எப்போதாவது சொன்னேனா? தன்னை அரசியலுக்குக் கொணர்ந்த கட்சியை உடைக்க முயன்றார். குற்றம் சொல்லிச் சொல்லி கடைசிவரை அவர்களோடும் அவர்கள் தந்த பதவியோடும் ஒட்டிக்கொண்டிருந்தார். பின்னர் தனது பிழைகளை மறைக்க மக்களின் உணர்ச்சிகளை ஊதிக் கிளப்பினார். மனிதர்களின் பலவீனங்களைத் தெரிந்தும், வளர்த்தும் வேற்றுக் கட்சிகளுக்குள் பேதங்களை உருவாக்கினார். அதையெல்லாம் பார்த்து உங்களைப்போன்ற ஏமாளிகள் வாக்களித்து அவரைப் நாடாளுமன்றிற்கு அனுப்பிவிட்டார்கள். இன்று கொழும்புக்கு வந்து பிள்ளைகளுடனும், மருமக்களுடனும், பேரப்பிள்ளைகளுடனும் சந்தோஷமாய் வாழ, அவருக்குச் சம்பளத்தோடு பதவி கிடைத்திருக்கிறது. இனி ஏன் அவர் அதிகம் பேசவேண்டும்? இனியாவது அவர் அதிகம் பேசியதன் நோக்கத்தை நம் தமிழினமும் அவருக்கு வால்பிடித்த ஊடகங்களும் புரிந்து கொள்ளுமா?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ வாரிதியார் செத்த பாம்பைத் திரும்பத் திரும்ப அடிக்கிறார். வேண்டாத வேலை!**

**2. கேள்வி:-** தமிழ்நாடு 'ஸ்டாலின்' அரசின் செயற்



பாடுகளைத் தொடர்ந்து கவனித்து வருகிறீர்களா?

**பதில் :-** கவனித்து வருகிறேன். ஆற்றல் மிக்க செயலாளர்களை நியமித்தது, புதிய இளைஞர்களை மாவட்ட ஆட்சியாளர்களாய் அமைத்தது, உலகப் புகழ் பெற்ற பொருளாதார நிபுணர்களை ஆலோசகர்களாய் ஆக்கிக் கொண்டது, ஈழத்தமிழர் பிரச்சினையை நேர்மையாய்க் கையாள முயற்சிப்பது என, அடுத்தடுத்த புதுமைச் செயற்பாடுகளால் 'சிக்ஸர்களாய்' அடித்துத் தள்ளுகிறார் அவர். மத்திய அரசு 'ஸ்டாலினுக்கு' டெல்லியில் தந்த வரவேற்பைப் பார்த்தால் 'மோடி'யே கொஞ்சம் ஆடிப்போய் இருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். மதுக்கடைகளைத் திறந்ததற்கு 'ஸ்டாலின்' சொன்ன காரணம் தான் சர்க்கரைப் பொங்கலில் அகப்பட்ட கல்லாய் நெருடுகிறது. (மதுக்கடைகளைத் திறக்காவிட்டால், மக்கள் கள்ளச்சாராயத்தை அருந்தி வீணாவார்களாம்...ஹா..ஹா... ஹா...) இந்தப் பிரச்சினையிலும் வருமான இலாபத்தைப் பார்க்காமல் மதுவிலக்கை உறுதியாய்க் கொணர்வார் என்றால் 'ஸ்டாலின்' தமிழ்நாட்டின் வரலாற்று நாயகனாய் மாறிவிடுவார் என்று நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற'**

**3. கேள்வி:-** சுகாதார அதிகாரிகள் 'கொவிட்' நோயாளர்களின் மரணங்கள் பற்றிப் பிழையான தரவுகளைத்



தந்தனர் எனவும், தான் புலனாய்வுத் துறையினரைக் கொண்டு அவர்கள் தந்த தரவுகள் பிழையானவை என்று கண்டுபிடித்தார் எனவும் ஜனாதிபதி சொல்கிறாரே?

**பதில் :-** (மேற்படி செய்தி உண்மையானால்) அதிகாரிகள் அதைச் செய்திருக்கக் கூடாது. ஜனாதிபதி இதைப் பகிரங்கமாய்ச் சொல்லியிருக்கக் கூடாது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'அதுவும் சரி. இதுவும் சரி. ஹி.. ஹி.. '**

**4. கேள்வி:-** இந்த உலகத்தில் நல்லவர்கள் அதிகமா? கெட்டவர்கள் அதிகமா?

**பதில் :-** அதிலென்ன சந்தேகம்? நல்லவர்கள்தான் அதிகம்! என்றைக்கு நல்லவர்களை விடக் கெட்டவர்கள் அதிகமாகின்றார்களோ, அன்றைக்கு நிச்சயம் இந்த உலகம் அழிந்துவிடும் என்பது உறுதி.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' நமக்கும் கொஞ்சம் திருக்குறள் தெரியுமாக்கும். ஹி...ஹி...ஹி...**

**5. கேள்வி:-** சக்தி ரி.வி. பேட்டியில், கூட்டமைப்பிலிருந்து பிரிந்து தனித்துச் செயல்படுவீர்களா என்று கேட்கப்பட்ட போது அங்ஙனம் செய்து தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குலைக்க விரும்பவில்லை என்று சித்தார்த்தன் எம்.பி. சொன்னதைக் கேட்டீர்களா?

**பதில் :-** என்னுடைய குறும்புக்கார நண்பன் ஒருவனுடன் இருந்து அப்பேட்டியைக் கேட்டேன். அவரின் பதிலைக் கேட்டுவிட்டு அந்த நண்பன், 'செலக்ரிவ் அமினீசியா' என்று ஒரு நோய் இருப்பது உனக்குத் தெரியுமா? என்று என்னைக் கேட்டான். பின்னர் அவனே, குறிப்பிட்ட சில விடயங்களைத் தவிர, மற்றவற்றை மறப்பதுதான் அந்தநோயின் அடையாளமாம் என்று விளக்கம் சொன்னான். எனக்கேன் இதை இப்போது சொல்கிறாய் என்று கேட்டேன். அதற்கு அவன் சித்தார்த்தனுக்கும் அந்த நோய் இருக்குமோ என்று சந்தேகமாய் இருக்கிறது என்றான். 'ஏன் அப்படிச் சொல்கிறாய்?' என்று மீளவும் நான் கேட்க, 'இயக்கம் நடத்தியபோது தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குழப்பாமல் ஒரே இயக்கமாய் இருப்பதுதான் நல்லது என்று நினைக்காதவர், கூட்டமைப்பில் முன்னாள் முதலமைச்சர் குழப்பங்கள் ஏற்படுத்தியபோது, கூட்டமைப்பு இனித் தொலைந்தது என்ற நினைப்பில் அங்கொரு காலும் இங்கொரு காலுமாக அவருக்குப் பின்னாலும் போய் நின்று இன ஒற்றுமைக் குழப்பத்திற்கு வழி செய்தவர், இன்று இன ஒற்றுமைக்காகப் பிரியாமல் இருப்பதாய்ச் சொல்கிறார். அப்படியானால் பழையவற்றையெல்லாம் அவர் மறந்துவிட்டார் என்றுதானே அர்த்தம்' என்று சிரிக்காமல் அவன் சொன்னான். எனக்கேன் வம்பு என்று நான் பேசாமல் இருந்துவிட்டேன். இந்தப் பெரிய பந்திக்குள் உங்கள் கேள்விக்கான பதில் இருக்கிறதா? என்று தேடிப் பாருங்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ இந்த ஆளுக்கு மறதி நோய் வந்தால் கனபேருக்கு நல்லது.**

**6. கேள்வி:-** மன்னாருக்கு ஒரு கிறிஸ்தவரைத்தான் அரச அதிபராக நியமிக்கவேண்டும் எனத் திருச்சபை கேட்டிருக்கிறதாமே.இது சரியாகுமா?

**பதில் :-** நானும் கேள்விப்பட்டேன். செய்தியின் உண்மைத்தன்மை பற்றித் தெரியவில்லை. அச்செய்தி உண்மையானால் அந்தக் கோரிக்கை எப்படிச் சரியாக இருக்க முடியும்? இந்த ஒரு கோரிக்கையினுள் ஜனநாயக முரண், அரசியல் அமைப்பு முரண், சமயப் பொதுமை முரண் எனப் பல முரண்பாடுகள் அடங்கியிருக்கின்றன. இப்படியே ஒவ்வொரு சமயத்தவரும் கேட்டால் முடிவு என்னாவது? ஒரு பிரதேசத்தின் சமய வளர்ச்சிக்கும் பிரதேச செயலகத்திற்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்பதே மனதில் எழும் பெரிய கேள்வி. இக்கோரிக்கையில் இருந்தே அரச நிர்வாகத்தைத் தமது மதத்திற்காகப் பயன்படுத்த இவர்கள் நினைக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறதல்லவா? வீணாகச் சமயப் பகை வளர்க்கும் இவர்களது இந்த முயற்சியை அனைவரும் ஒருமித்துக் கண்டிக்கவேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ராஜா சிறுபிள்ளையுமாய் பிரபுக்கள் அதிகாரமே உள்ளவர்களுமாய் இருக்கப்பட்ட தேசமே உனக்கு ஐயோ! ('பைபிள்' பிரசங்கி - அதிகாரம் 10:16 ஆம் வசனம்)**

**7. கேள்வி:-** புலனாய்வுத்துறையை நம்பி பயணத்தடையை நீக்குவதா? சுகாதார அதிகாரிகளின் தரவை நம்பி பயணத்தடையை விதிப்பதா? எது சரியாய் இருக்கும் என்று நம்புகிறீர்கள்?

**பதில் :-** இந்தக் கேள்விக்குக் காலம் தான் பதில் சொல்லப் போகிறது. ஒன்றை மட்டும் நிச்சயமாய்ச் சொல்லலாம். மக்களின் உயிரைப் பணயம் வைத்து அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் சூதாடத் தொடங்கிவிட்டார்கள். இவர்களுள் யார் வென்றால் என்ன? யார் தோற்றால் என்ன? இழப்பை மக்கள்தான் சந்திக்கப் போகிறார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'மரண விளையாட்டு'**

(14 ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir




# இலங்கையின் நாதஸ்வர மேதை கே.எம்.பஞ்சாபிகேசன்

● ப்ரியமதா பயஸ்

இலங்கை மண் அதிக கலைகளை வளர்த்த மண் அதிபெரும் கலைஞர்களை உருவாக்கியமண் – ஈழத்துக் கலைகளில் என்றும் சிறப்புக்குரிய கலையாக விளங்குவது நாதஸ்வரம் மற்றும் தவில் இசைக்கலை – இந்த இரண்டு வாத்தியங்களும் இல்லாமல் இலங்கையில் தமிழர்கள் மத்தியில் மங்கள நிகழ்வுகள் நடப்பது மிக குறைவே சைவ ஆலய திருவிழாக்கள், திருமணம்,பூப்புனித நீராட்டு, புதுமனைப் புகுவிழா, வரவேற்பு நிகழ்வு , பாராட்டு நிகழ்வு என அனைத்து மங்கள நிகழ்வுகளிலும் இந்த இரு இசைக்கருவிகளும் பேரொலி எழுப்பி முழங்கவே நடந்தேறும், அந்தளவு இலங்கை தமிழர்களின் வாழ்வோடு இணைந்த கலையாக இருப்பது இந்த தவில் நாதஸ்வர இசைக்கலை .

இந்தக் கலை இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் இருந்தாலும் வடக்கு பகுதியில்த்தான் அதன் செழுமையான வளர்ச்சியும் தொடர்ச்சியும் இருக்கிறது .இந்த செழுமையான வளர்ச்சிக்கு காரணம் வடக்கில் இருக்கும் இருந்த இந்த துறையில் புகழ் பூத்த வித்வான்களே ஆகும் .

அந்த வகையில் இன்று இலங்கையின் வடக்கில் வாழ்ந்த புகழ் பூத்த நாதஸ்வர இசைக் கலைஞர் கே. எம். பஞ்சாபிகேசன் அவர்களின் சிரார்த்த தினம் இன்றைய நாளில் அவர் பற்றிய விபரங்களை இந்தக் கட்டுரை சுட்டுகிறது .

பஞ்சாபிகேசன் 1924 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி சாவகச்சேரியில் வாழ்ந்த தவில் கலைஞர் கே. முருகப்பாபிள்ளைக்கும் சின்னப்பிள்ளைக்கும் மூத்த மகனாவார் .

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்வி கற்ற இவர் நாதஸ்வரக் கலைஞர்கள் சண்முகலிங்கம் பிள்ளை, அப்புலிங்கம்பிள்ளை ஆகியோரிடமும், இராமையாபிள்ளை, பி. எஸ். கந்தசாமிப்பிள்ளை ஆகியோரிடம் நாதஸ்வர இசைப் பயிற்சியினைப் பெற்றார். தனது 15வது வயதில் முதற் கச்சேரியை பருத்தித்துறை சித்திவிநாயகர் ஆலயத்தில் அரங்கேற்றினார்.

பின்னர் இவர் தமிழ்நாடு சென்று நாதஸ்ரக் கலைஞர் கக்காயி நடராஜசுந்தரம் பிள்ளையிடம் மேலதிக பயிற்சி பெற்றார். பின்னர் ஐயம்பேட்டை வேணுகோபால் பிள்ளையிடம் பயிற்சி பெற்று மரபுவழிக்கச்சேரி செய்யும் முறைமையினைப் பயின்று கொண்டார்.

பயிற்சிகளின் பின்னர் இலங்கை வந்த இவர் இலங்கையின் பல இடங்களிலும் கச்சேரிகளை நடத்தினார். திருவாரூர் டி. என். ராஜரத்தினம் பிள்ளை, திருவாரூர் லெச்சையப்பா, அம்பல் இராமச்சந்திரன், பந்தனை நல்லூர் தெட்சணாமூர்த்திப்பிள்ளை, கோட்டூர் இராஜரத்தினம்பிள்ளை போன்ற தமிழகக் கலைஞர்களுடன் இணைந்து நாதசுரம் வாசித்தார். ஈழத்து தவில் கலைஞர்கள் வி. தெட்சணாமூர்த்தி, என். ஆர். சின்னராசா எனப்பலரும் பஞ்சாபிகேசனுக்கு தவில் வாசித்திருக்கிறார்கள்.

அளவெட்டி மாணிக்கம் இரத்தினம் என்பவரைத் திருமணம் புரிந்த பஞ்சாபிகேசனுக்கு மூன்று ஆண்



பிள்ளைகளும் மூன்று பெண் பிள்ளைகளும் உள்ளனர். இவரது புதல்வர்கள் கே. எம். பி. நாகேந்திரம், கே. எம். பி. விக்கினேஸ்வரன் ஆகியோரும், பேரப்பிள்ளைகள் சித்தார்த் சகோதரர்களும் தற்போது நாதஸ்வரக் கலைஞர்களாக விளங்குகின்றனர் .

இந்த நாதஸ்வரம் ,தவில் ஆகிய இரண்டும் பரம்பரை கலைகளாகவே இலங்கையில் பின்பற்றப் பட்டும் தொடரப்பட்டும் வருவது மறுக்கமுடியாத உண்மை, நாகரீக போக்கில் தற்காலத்தில் ஒரு சிலர் இந்த கலையை சமூக பரவலில் கற்றுக் கொண்டாலும் நாதஸ்வரம் தவில் ஆகிய இரண்டு இசை கருவிகளை வாசிப்பவர்களுக்கு சமூக ரீதியில் ஒரு சாதி அடிப்படை வாத்திய கலைஞர்களாகவே பரம்பரை தொழிலாக இதை செய்கின்றனர் – இசை வித்துவான் என்பது மட்டுமல்லாமல் இந்த இசை வாழ்க்கையை பரம்பரை தொழிலாகவே அவர்கள் மேற்கொள்ளுகின்றனர் – காரணம் தமிழர்களின் வாழ்வில் இந்த இசை இன்றியமையாத ஒன்றாக உள்ளமையால் அதைத் தொழிலாக செய்வதில் அவர்களுக்கு எந்த இடர்பாடுகழும் இல்லை .

நட்டுவ மேளம் , நட்டுவ நாயனம் என்றே ஊர் வழக்கில் இந்த இசை தொழிலை குறிப்பிடுகின்றனர் – ஒரு கோவில் திருவிழாவில் நட்டுவ மேளம் அதிக கூட்டங்களாக வந்தால் அந்த திருவிழா களைகட்டும் என்பது உண்மை (ஒரு கூட்டம் மேளம் என்றால் ஒரு நாதஸ்வரம், ஒரு தவில், ஒரு தாளம், ஒரு சுருதி பெட்டி) சில ஆலயங்களில் பத்து கூட்டம் மேளம் பிடித்தும் அதற்குமேலும் மேளம் பிடித்தும் திருவிழாக்களைச் செய்வது கோலாகலமான திருவிழாக்களின் சிறப்பு.

அதற்கும் மேலாக இந்த இசைத் தொழில் ஒரு பரம்பரை கலையாக மட்டுமே பேணப்பட்டு வருகின்றமையும் ஒரு சாதிக்குரிய தொழிலாக மட்டும் பேணப் பட்டு வருகின்றமையும் குறிப்பிட வேண்டிய விடயமே.

வடக்கில் இணுவில், தாவடி, கோண்டாவில், வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகள் இந்த கலைக்கும் கலைஞர்களுக்கும் பெயர்போன பகுதிகள். தெட்ணாமூர்த்தி ,கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி போன்ற முதுபெரும் கலைஞர்களை தந்த மண் இந்த வடக்கு மண் – அந்த வகையில் இன்று சிரார்த்த தினம் காணும் கே. எம். பஞ்சாபிகேசன் –

**அகில இலங்கை கம்பன் கழகத்தின் இசைப்பேரறிஞர் விருது**

**இலங்கை கலாசார அமைச்சின் கலாபூஷணம் விருது**

**யாழ்ப்பாணம் இந்து கலாசார சபையின் சிவகலா பூஷணம் விருது**

**1998 இல் வடகிழக்கு மாகாண சபையின் ஆளுநர் விருது**

**திருக்கேதீச்சரத் தேவஸ்தானத்தின் இசைவள்ளல் நாதஸ்வரகலாமணி பட்டம்**

**இலங்கை கல்வி அமைச்சின் நாதஸ்வர கானவாரிதி பட்டம்**

**இந்து கலாசார அமைச்சின் ஸ்வரஞானதிலகம் பட்டம்**

**2010 அக்டோபர் 6 இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம்**

ஆகிய பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட பெரும் கலைஞராக விளங்கியவர்.

இன்று பஞ்சாபிகேசனின் 6 ஆவது சிரார்த்த தினம் அனுஷ்டிக்கப்படுகிறது . பஞ்சாபிகேசன் தனது 90வது அகவையில் 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி அதிகாலை 12:20 மணிக்கு கொழும்பில் காலமானார்.

வாழ்க அவர் புகழும் என்றும் தனித்துவமான இசைக்கலையும்.

# கூட்டணி அரசு என்றால் குழப்பம் இருக்க செய்யும்

## தினேஷ் குணவர்தன கூறுகிறார்

கூட்டணி அரசு என்றால் குழப்பம் இருக்கவே செய்யும் என சபை முதல்வரும், அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

ஒவ்வொரு கட்சிக்கும் வெவ்வேறான கருத்துகள், நிலைப்பாடுகள் இருக்கக்கூடும்.

இவை இணைந்து கூட்டணி அமைக்கும்போதும் மாறுபட்ட கருத்துகள் முன்வைக்கப்படலாம். எனவே, பிரச்சினைகள் இருப்பின் அவை தொடர்பில் பேசி, தீர்த்து கூட்டணி அரசாக முன்னோக்கிப் பயணிப்போம்.

தற்போதைய சூழ்நிலையில் உலக பொருளாதாரத்துக்கு பெரும் சவால் ஏற்பட்டுள்ளது. தேசிய பொருளாதாரத்திலும் அது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, சட்ட திட்டம், கொள்கைத் திட்டம் மற்றும் வேலைத்திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. – எனத் தெரிவித்துள்ளார்.



# தனிமைப்படுத்தப்பட்டது மட்டக்களப்பு மாமாங்கம்



கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மட்டக்களப்பு – மாமாங்கம் பகுதி, தனிமைப்படுத்தலுக்கு கடந்த வியாழக்கிழமை மாலை உட்படுத்தப்பட்டுள்ளது.

மாமாங்கத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகளவு இனங்காணப்பட்டமையைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மாமாங்கம் ஊடாக செல்லும் அனைத்து பிரதான வீதிகளும் மூடப்பட்டுள்ளமையுடன், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மாமாங்கம் பகுதியில் வியாழன் மாத்திரம், 10 பேர் வைரஸ் தொற்றாளர்களாக அடையாம் காணப்பட்டனர். இதற்கமைய இந்த மாதத்தில் மாத்திரம் குறித்த பகுதியில் 39 பேர் வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களுக்கு தடுப்பூசி செலுத்தல்



முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு, சினோபோம் கொவிட் – 19 தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட இராணுவ வைத்தியசாலை வைத்தியர்கள் ஊடாக குறித்த ஆடைத்தொழிற்சாலையில் வைத்தே அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கு கடந்த வியாழக்கிழமை முதல்தடுப்பூசிசெலுத்தப்பட்டு வருகின்றது.

புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் சுமார் 1,200 இற்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் பணியாற்றி வருகின்றனர்.

கடந்த மாதம் 17 ஆம் திகதி, இந்தத் தொழிற்சாலையில் அதிகளவான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து ஒருமாதகாலமாகத் தொழிற்சாலை மூடப்பட்டு, மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இந்நிலையிலேயே கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து ஊழியர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் சினோபோம் கொவிட் – 19 தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை வியாழன் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# வடமராட்சி கிழக்கில் 100 குடும்பங்களுக்கு சிறிதரன் எம்.பியால் நிவாரணம் வழங்கல்





*யாழ் நகரில் அமைந்துள்ள தரணி சுப்பமார்க்கெட்டின் பொருள் உதவியில் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் யாழ் மாவட்ட இணைப்பாளர் சூரியகாந்தின் ஒழுங்கமைப்பில் நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.*

*யாழ்ப்பாணத்தில் கொரோனா முடக்கம் காரணமாக பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்ட 1,473 குடும்பங்களுக்கு சிறிதரன் எம்.பியின் ஒழுங்குபடுத்தலில் இதுவரை நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.*

# பாட்டும் நானே...

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**8. கேள்வி:-** மறைந்த எழுத்தாளர் மல்லிகை ஜீவாவைப் பற்றி இப்போதும் நினைப்பதுண்டா?

**பதில் :-** அடிக்கடி நினைப்பேன். எழுத்தாளர் என்பதைக் கடந்து எங்களது ஆதரவாளராக இருந்த அவரை எப்படி நாம் மறக்கமுடியும்? எமது ஆசிரியர்களைப் போலவே எங்கள் வளர்ச்சி கண்டு மகிழ்ந்த மனிதர் அவர். தனது 'மல்லிகைப் பந்தலின்' கீழ் நிறைய எழுத்தாளர்களுக்கு நிழல் கொடுத்தார். சமூக அரங்கில் உயர அவருக்கு எத்தனையோ தடைகள் இருந்தன. தனது சொந்தப்பலத்தில் அத்தடைகளை உடைத்து சமூக அரங்கில் உயர்ந்த அவர், தான் உயர்ந்ததோடல்லாமல், எத்தனையோ ஆற்றலாளர்களை இனங்கண்டு, எந்தப் பயனும் எதிர்பார்க்காமல் உயர்த்தி வைத்தார். அவரது எழுத்தாற்றலும் பெரியதுதான். தன்னைத் தாழ்த்தியவர்களை தனது எழுத்துக்களில் பழிவாங்க நினைக்காதது அவரது தனிச்சிறப்பு. எழுத்தில் மட்டுமன்றி வாழ்விலும் புரட்சி செய்தவர். தனது ஆளுமையாலும் கம்பீரத்தாலும் அறிவுலகத்தைச் சேர்ந்த பலபேரை ஆண்டு நின்றவர். ஈழத்து இலக்கியத்தைஉலகிற்குஅடையாளம் காட்டியவர். சுருங்கச் சொன்னால் அவர் ஒரு தனி மரத் தோப்பு. இப்படி இன்னும் எத்தனையோ சொல்லலாம். ஆனால் அவரது கனவுகள் இன்று பொய்த்து விட்டதாய்த்தான் எனக்குத் தோன்றுகிறது. தனக்குப் பின் 'மல்லிகை'யைப் பலரும் முன் எடுப்பார்கள், அதுபற்றி பலர் ஆராய்ச்சிகள் செய்வார்கள் என்றும் நினைத்திருந்தார். 'மல்லிகை'யின் பாதிப்பை இலக்கிய உலகம் தொடர்ந்து போற்றும் என்று கனவு கண்டார் அவை ஒன்றும் நடப்பதாய்த் தெரியவில்லை. ஜீவா முதுமை காரணமாக, 'மல்லிகை'யை நிறுத்தியதும், அவர் உயிரோடு இருக்கும் போதே அவரைப் பலரும் மறந்து போனார்கள். அது எமது சமுதாயத்தின் பெரிய குறைபாடு. உண்மையானவர்களை நம் இனம் சரியாகப் போற்றுவதில்லை.



**உலகநாதரின் ஒப்பீனியன்** ⁎ காலம் அவர் புகழைக் காக்கட்டும்!

# தொற்றாளர்களை மறைத்து வைக்கும் நிறுவனங்களுக்கு எச்சரிக்கை விடுப்பு

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத் தலைவர் உபுல் றோஹண

சில அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் தொடர்பில் சுகாதார பிரிவிற்கு அறிவிக்காமல் மறைத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரியவந்துள்ளன என சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இனிமேல், அவ்வாறு தொற்றாளர்களை மறைத்து வைத்திருக்கும் எந்தவொரு நிறுவனமாக இருந்தாலும் அவற்றுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என குறித்த சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள சுகாதார பரிசோதகர் இது தொடர்பில் அவதானமான இருக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்ட போதிலும் எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனைகள் ஊடாக அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்படுவதை கவனத்திற் கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

இனங்காணப்படாத பல தொற்றாளர்கள் வெளியில் இருக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## 2021 காலபோகத்தினது வடமாகாண நெற்செய்கையளவு

| | குறிக்கப்பட்டவை ha | செய்யப்பட்டவை ha |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 11,857.00 | 11,344.00 |
| | **11,857.00** | **11,344.00** |
| கிளிநொச்சி | 24,921.00 | 28,433.60 |
| | **24,921.00** | **28,433.60** |
| மன்னார் | 21,154.00 | 21,154.00 |
| | **21,154.00** | **21,154.00** |
| முல்லைத்தீவு | 19,849.00 | 21,168.84 |
| | **19,849.00** | **21,168.84** |
| வவுனியா | 19,901.00 | 20,998.00 |
| | **19,901.00** | **20,998.00** |

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# ‘நாய் போன்று குரைக்கக் கூடாது’ என்றமையால் யாழ்.மாநகரசபை உறுப்பினருக்கு ஒருமாதம் தடை!

## விதித்தார் முதல்வர் மணிவண்ணன்



யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்.மாநகர சபை அமர்வில் ‘நாய் போன்று குரைக்க கூடாது’ எனும் சொல்லைப் பிரயோகித்தமைக்காக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஒருவருக்கு சபை அமர்வில் கலந்து கொள்ள ஒரு மாத காலத்துக்கு தடை விதித்தார் முதல்வர் வி.மணிவண்ணன்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்த கூட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது. அதன் போது மாநகர சபையின் ஆவணம் ஒன்று மராமத்துக் குழுவில் நிறைவேற்றிய தீர்மானம் தொடர்பாக சபை உறுப்பினர் ஒருவர் அவரது உத்தியோகபூர்வ முகநூலில் பதிவேற்றிய விடயம் தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

மேற்படி கடிதம் எவ்வாறு உறுப்பினர் கைக்குக் கிடைத்தது என்பது தொடர்பில் சர்ச்சை எழுப்பிய நேரம், சக உறுப்பினரான பார்த்தீபனுடன் வாக்கு வாதம் ஏற்பட்டது. இதன் போது ஓர் உறுப்பினர் ‘நாய் மாதிரி குரைக்க கூடாது’ என்ற வார்த்தையைப் பிரயோகித்தார்.

அதனால் முதல்வர் சபையில் அநாகரிகமான முறையில் சொற்பிரயோகங்களை பாவித்தமைக்காக சபையில் மன்னிப்பு கோரி, குறித்த சொற்பிரயோகங்களை மீளப் பெறுமாறு உறுப்பினரைக் கேட்டுக்கொண்டார். இருப்பினும் இந்த வார்த்தையைப் பயன்படுத்திய உறுப்பினர், சக உறுப்பினர் தம்மை ஒருமையில் விளித்த போதே நானும் உச்சரித்தேன், இருப்பிடினும் எந்த உறுப்பினரையும் குறிப்பிட்டுக் கூறவில்லை எனத் தெரிவித்தார். மேற்படி உறுப்பினர் கூறிய வார்த்தைக்கு மன்னிப்புக் கோர வேண்டும் என முதல்வர் கோரிய சமயம், உறுப்பினர் தொடர்ந்து மறுப்புத் தெரிவித்தார். இதனால் உறுப்பினரை வெளியேற்றும் பிரேரணையை கூறிய முதல்வர் சபையை 5 நிமிடம் ஒத்தி வைத்தார்.

மீண்டும் சபை கூடிய நேரம் உறுப்பினர் சபையில் அநாகரிகமான வார்த்தைப் பிரயோகம் மேற்கொண்டமையால் அவரை சபையில் இருந்து வெளியேற்றும் பிரேரணையை சபையில் முன்மொழிவதாகவும் வாக்கெடுப்பிற்கு விடுமாறும் முதல்வர் செயலாளரைக் கோரியமையோடு சபையின் ஒலிப்பதிவை மீள ஒலிபரப்பக் கோரினார். அந்த ஒலிபரப்பு ஒலிவாங்கி மூலம் ஒலிக்க விடப்பட்டு வாக்கெடுப்பிற்கு தயாரான சமயம், கூட்டமைப்பின் உறுப்பினர் ந.லோகதயாளன் இந்த விடயம் தொடர்பில் தனித்து ஆராய 5 நிமிட கால அவகாசம் கோரியமையால் சபை மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டது. சபை கூடிய சமயம் சர்ச்சையில் ஈடுபட்டவர்கள் இரு உறுப்பினர்கள், ஆனால் ஒருவரது உரையை ஆராயாது மறு தரப்பு தொடர்பிலும் ஆராய வேண்டும், ஏனெனில் மறு உறுப்பினரும் ஒருமையில் விளித்தார் எனக் கூறப்படுகின்றது என கூட்டமைப்பின் உறுப்பினர் ந.லோகதயாளன் மீண்டும் கோரிக்கை விடுத்தார்.

அதனை அடுத்து உறுப்பினர் வ.பார்த்தீபன் தவறான அல்லது அநாகரிகமான சொற்பிரயோகங்களை பாவித்திருந்தால் அவற்றை மீள பெறுகிறேன் என சபையில் தெரிவித்தபோதும், ‘நாயைபோல்’ என விளித்த உறுப்பினர் அந்த சொல்லை மீளப் பெற மறுத்தார். இதனையடுத்து பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

கூட்டமைப்பு வாக்கெடுப்பில் நடுநிலை வகித்தது.

வாக்கெடுப்பில் 23 வாக்குகள் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தமைக்கு அமைய உறுப்பினரை சபை நடவடிக்கையில் இருந்து ஒரு மாத காலத்துக்கு இடைநீக்குவதாக முதல்வர் அறிவித்தார். மேற்படி உறுப்பினர் சபையில் இருந்து வெளியேறினார்.

இதேநேரம் ஒரு விசேட தீர்மானம் சபையின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடனேயே நிறைவேற்ற முடியும், ஆனால் இது சாதாரண தீர்மானம் போன்று செயற்படுத்தப்பட்டமையை கண்டித்துத்தாம் சபையில் இருந்து வெளியேறுகிறார் எனக் கூறி உறுப்பினர் வை.கிருபாகரனும் சபையில் இருந்து வெளியேறினார்.

# நான்கு மாவட்டப் பொது வைத்தியசாலைகளையும் சுகாதார அமைச்சுக்கு கையளிப்பதைத் தவிர்க்குக!

## அவைத் தலைவர் சி.வி.கே. வடக்கு ஆளுநருக்குக் கடிதம்



வடக்கு மாகாண நிர்வாகத்தின் கீழ் உள்ள நான்கு மாவட்டப் பொது வைத்தியசாலைகளையும் மத்திய சுகாதார அமைச்சுக்குக் கையளிக்கவேண்டியதில்லை. கடந்த 22 ஆம் திகதி மத்திய சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியும் இந்த விடயத்தை மறுதலிக்கவில்லை. எனவே, இவற்றைக் கையளிக்கும் நடவடிக்கையைத் தவிர்க்குக.

– இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸுக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளார்.

அவரது கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கடந்த 22.06.2021 ஆம் திகதி இந்த விடயம் நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட பொழுது, பதிலளித்து பேசிய சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பின்வருமாறு கூறியுள்ளார்.

‘மாவட்டங்கள் விரும்பாவிட்டால் நாம் வைத்தியசாலைகளை எமது பொறுப்பில் எடுக்க மாட்டோம். அதேவேளை, மாகாண சபைகளின் கீழ் உள்ள வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கப்படமாட்டாது. – என்றார்.

எனினும், இந்தக் கூற்றில் அடங்கிய சில விடயங்களைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

வட மாகாணத்தில் உள்ள எந்த வைத்தியசாலையும் மாவட்ட நிர்வாகங்களின் கீழ் இல்லை. அவ்வாறான எந்தவித சட்டபூர்வ கட்டமைப்பும் இல்லை என்பதால் மாவட்டங்கள் விரும்பாதுவிட்டால் என்ற நிலைமை பொருத்தமற்றது.

வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் உள்ள போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளும் சட்டரீதியாக மாகாண சபை நிர்வாகத்தின் கீழே தான் உள்ளன.

இவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் யாவும் தேசிய வரவு செலவுத் திட்டத்தின் படி தேசிய திறைசேரியால் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுகின்றன.

எனவே, மாகாண வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைச்சு நிதி வழங்குவது என்ற பிரச்சினை எழாது.

எனினும், விசேட சூழ்நிலைகளில் மக்கள் நலன்கருதி சுகாதார அமைச்சு நிதி ஒதுக்கீடு செய்யலாம். அது அமைச்சரின் தற்துணிவுத் தெரிவாகும். (Discretionary Option) அந்த வகையில் அவர் மாகாண சபைக்கு விசேட நிதி எதையும் வழங்காது தவிர்க்கலாம், அதனை கேள்விக்குட்படுத்த முடியாது.

ஆயினும், இதுவரை காலமும் தேசிய வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகளின் மூலமே மாவட்ட பொது வைத்தியசாலைகள் உட்பட சகல மாகாண வைத்தியசாலைகளும் மாகாண சபையால் நிர்வகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இதில் எந்த மாற்றமும் முன்மொழியப்படவில்லை. எனவே, மாவட்ட பொது வைத்தியசாலைகளுக்கான ஒதுக்கீடுகள் வழமை போல தேசிய வரவு – செலவுத்திட்டத்தின் மூலமாக மாகாண சபைக்கே வழங்கப்படும் என்பது தெளிவு.

சுகாதார அமைச்சரும் இதனை மறுதலிக்கவில்லையாதலால் வடக்கு மாகாண சபையின் நிர்வாகத்திற்கு உட்பட்ட நான்கு மாவட்ட பொது வைத்தியசாலைகளை மத்திய சுகாதார அமைச்சுக்கு கையளிக்க வேண்டிய நிலை உருவாகாது. எனவே, இவற்றை கையளிக்கும் நடவடிக்கைகளைத் தவிர்க்குமாறு அன்புடன் வேண்டுகிறோம். – என்று உள்ளது.

மேற்படி கடிதத்தின் பிரதி வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதனுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# கொரோனாச்சட்டத்தை மீறிய மேலும் 743 பேர் சிக்கினார்கள்

## பொலிஸ் பேச்சாளர் தகவல்



நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 743 பேர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குளியாப்பிட்டி பகுதியிலேயே பெருமளவானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மாத்தளையில் 78 பேரும், கண்டியில் 66 பேரும், புத்தளத்தில் 50 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.

முகக்கவசம் அணியத் தவறுவோர் தொடர்பில் அதிகக் கவனம் செலுத்தப்படுகின்றது.

எனவே, தனிமைப்படுத்தல் சட்டவிதிகளைப் பின்பற்றுமாறு மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம்-என்றார்.

# கல்லூரி வீதிக்குக் குறுக்கறுத்து யாழ் இந்துவில் நிலக் கீழ் பாதை

## புதிய திட்டம் மாநகர சபையிடம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீதியின் இரு பக்கங்களிலும் உள்ள கல்லூரிக் கட்டடங்களுக்கு இடையில் போக்குவரத்திற்காக நிலத்திற்குக் கீழான பாதை அமைப்பதற்கு மாநகர சபையிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

கல்லூரி வீதியின் இரு மருங்கும் பாடசாலையின் கட்டடங்கள் அமையப்பெற்றுள்ளன. ஒரு புறம் பாடசாலையின் பிரதான கட்டடத் தொகுதி. மறுபுறம் குமாரசுவாமி மண்டபக் கட்டடத் தொகுதி. இதனால் பாடசாலைத் தேவைகளிற்காக ஆசிரியர்கள், மாணவர்கள் அடிக்கடி வீதியைக் கடக்க வேண்டிய தேவைப்பாடும் அதிகமாக உள்ளது.

இவ்வாறு வீதியைக் கடக்கும் நேரங்களில் விபத்து உள்ளிட்ட அனர்த்தம் ஏதும் நிகழாத வண்ணம் தடுக்கும் நோக்கில் நிலக் கீழ் வீதி திட்டமிடப்படுகின்றதாம். இதற்காகப் பாடசாலையின் இரு கட்டடப் பகுதிகளையும் இணைக்கும் வகையில் நிலத்திற்கு கீழான பாதை அமைக்கப் பாடசாலையின் பழைய மாணவர்களினால் திட்டமிடப்படுவதாகக் கூறப்படுகின்றது.

பாடசாலை நிர்வாகத்தினால் இது தொடர்பாக யாழ்.மாநகரசபை நிர்வாகத்திடம் கோரிக்கை விடப்பட்டுள்ளதாக அறிய வந்தது.

காலைக்கதிர்
Kalaikkathir

# வவுனியா ஆடைத்தொழிற்சாலையில் தடுப்பூசி பெற்ற 15 பேருக்கு ஒவ்வாமை

(வவுனியா நிருபர்)

வவுனியா, இராசேந்திரங்குளம் ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்ட 15 பேர் ஒவ்வாமை காரணமாக ஆடைத்தொழிற்சாலை சிகிச்சை கூடம் மற்றும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் இன்று சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்களுக்கு இராணுவத்தினர் ஊடாக சினோபோர்ம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருகின்றன. இதன்போது 15 பேர் ஒவ்வாமை காரணமாகப் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதில், வவுனியா, இராசேந்திரங்குளம் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் சிலர் தடுப்பூசி ஏற்றப்பட்ட நிலையில் ஒவ்வாமை காரணமாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில்



சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சேர்க்கப்பட்டவர்களில் பலர் உடல் நிலை சீரடைந்த நிலையில் வீடுகளுக்கும் திரும்பியுள்ளனர்.

இன்னும், சிலருக்கு ஆடைத்தொழிற்சாலையில் உள்ள சிகிச்சை கூடத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர். (100)

# ஒட்டுமொத்த அரசியல் கைதிகளையும் கோட்டாவால் ஏன் விடுவிக்க முடியாது?

## அனந்தி சசிதரன் கேள்விக்கணை

(இ.கலையமுதன்)

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் விவாதத்தால் 16 அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும் என்றால் ஏன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவாலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவாலும் ஒட்டுமொத்த அரசியல் கைதிகளையும் விடுவிக்க முடியவில்லை?

- இவ்வாறு ஈழத் தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலாளர் நாயகமும் முன்னாள் வடக்கு மாகாண சபையின் அமைச்சருமான அனந்தி சசிதரன் கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகாலமாக சிறைகளில் இருந்த அரசியல் கைதிகளில் ஒரு தொகுதியினர் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இது மகிழ்ச்சியான விடயமாகும்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் வருடக்கணக்கில் போராட்டங்கள் நடைபெற்ற நிலையிலேயே அவர்கள் விடுவிக்கப்பட்டதுஉண்மையில்மகிழ்ச்சியான விடயமே. இவை தவிர மிகுதியாகஉள்ள அரசியல்கைதிகளும்எந்தவிதபாரபட்சமும்



இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும். சிங்கள, முஸ்லிம்கள் கூட ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு உதவினர் என்ற குற்றச்சாட்டில் இன்றும் பலர் அரசியல் கைதிகளாக உள்ளனர். அவர்களையும் விடுவிக்க வேண்டும். ஒரு சாதாரண விளையாட்டுத்துறை அமைச்சரால் விவாதம் ஒன்றை நடத்தி 16 அரசியல் கைதிகளை விடுவிக்க முடியும் என்றால் ஏன் ஜனாதிபதியாலும் பிரதமராலும் ஒட்டுமொத்த அரசியல் கைதிகளையும் விடுவிக்க முடியவில்லை என்ற கேள்வி எமக்குள் எழுகின்றது.

இரகசியத் தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு பெயர் வெளியிடப்படாமல் இருந்தவர்கள் மற்றும் சரணடைந்து காணாமல்போனவர்கள் பற்றிய விவரங்களையும் அரசு வெளிப்படுத்த வேண்டும் - என்றார்.

# முல்லைத்தீவில் வெடி விபத்து!

## ஒருவர் காயம்


முல்லைத்தீவுப் பகுதியில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு சுவாமி தோட்டப் பகுதியிலுள்ள தென்னந்தோட்டத்தைத் துப்புரவுசெய்து குப்பைகளுக்குத் தீ மூட்டியபோதே குப்பைக்குள் இருந்த வெடிபொருள் வெடித்துச் சிதறியதில் குப்பைக்குத் தீ மூட்டியவர் காயமடைந்துள்ளார்.

அதையடுத்து அவர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், சம்பவ இடத்தில் மேலதிக விசார ணைக்காகச் சென்ற போது குப்பை மூட்டப்பட்ட பகுதிக்கு அண்மையில் இருந்து வெடிக்காத நிலையில் எறிகணை ஒன்றையும் மீட்டுள்ளனர்.

# இலங்கைக் கடற்பரப்பில் இன்னொரு கப்பலில் தீ




இலங்கையின் தென் கடற்பரப்பில் மகா ராவணா வெளிச்ச வீட்டிலிருந்து கிழக்கே 480 கடல் மைல் தொலைவில் இந்து சமுத்திரப் பகுதியில் கொள்கலன் கப்பல் ஒன்று தீ விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து சிங்கப்பூர் நோக்கிப் பயணித்த லைபீரியா நாட்டுக்குச் சொந்தமான 'எம். எஸ்.சி மெசீனா' கப்பலே இவ்வாறு தீ விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

அந்தக் கப்பலின் இயந்திரப் பிரி வில் வியாழன் இரவு தீ ஏற்பட்டுள்ளது எனச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தீயைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்குத் தயாராகியுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

# கொரோனாவின் தீவிரத்தால் கரணவாய் முற்றாக முடக்கம்

## மேலும் 9 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தல்



எஸ்.நிதர்ஷன்

கொரோனா வைரஸ் தொற்றின் தீவிரத்தால் யாழ்ப்பாணம் உள்ளிட்ட 5 மாவட்டங்களின் 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் நேற்று காலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதனடிப்படையில், யாழ். மாவட்டத்தின் கரவெட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரணவாய் கிராம உத்தியோகத்தர் பிரிவும், மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் பியர் கிழக்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், பதுளை மாவட்டத்தின் வெலிமடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறிலங்கபொல கிராம உத்தியோகத்தர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மடுல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொத்தகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் நொரகல்லவத்த மேல் பிரிவு, பனாவென்ன கிராம உத்தியோகத்தர் பிரிவின் பெல்மடுல்ல தோட்டத்தின் முதலாம் பிரிவு, பனாவென்ன கிராம உத்தியோகத்தர் பிரிவின் பெல்மடுல்ல தோட்டத்தின் 5 ஆம் இலக்க பிரிவு, கபுஹென் தொட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவின் பெல்மடுல்ல தோட்டத்தின் 5 ஆம் இலக்க பிரிவு ஆகியன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

களுத்துறை மாவட்டத்தின் மத்துகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யட்டதொல கிராம உத்தியோகத்தர் பிரிவின் அம்பத்தென்னவத்த பிரதான பிரிவு மற்றும் க்ளேபிரிவு ஆகியன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் கூறினார்.

இதனிடையே, தனிமைப்படுத்தப்பட்டிருந்த கொழும்பு மாவட்டத்தின் கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 233ஆம் இலக்க தோட்டம் மற்றும் மஹவத்த வீதி ஆகியன தனிமைப்படுத்தலிலிருந்து இன்று காலை 6 மணிக்கு விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.